Registered as a NewsPaper

இலவச் பிரதி

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12





வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா. உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.

T.P: 024-222 4247 (சி-12761)



நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி-02 | 18-09-2005 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை-213


# உள்நாட்டிலொன்று வெளிநாட்டிலொன்று சனாதிபதி சந்திரிகா பேசுகின்றார்!

## சர்வதேச சமூகம் இதனைப் புரிந்துகொள்ளுதல் வேண்டும் என தமிழ்ச்செல்வன் கோரிக்கை

(கிளிநொச்சி)

*சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளிநாடுகளில் பேசுகின்ற பேச்சிற்கும் இலங்கையில் பேசுகின்ற பேச்சுக்களுக்குமிடையே ஏராளமான முரண்பாடுகள் உள்ளன. சந்திரிகாவின் அறிக்கைகளை தமிழ் மக்கள் நம்பியதாக வரலாறு இல்லை. இதனை சர்வதேச நாடுகள் புரிந்து கொள்ள வேண்டுமென அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார்.*

சமஷ்டி முறையிலான தீர்வை ஏற்படுத்தப் போவதாக சந்திரிகா குமாரதுங்க நியூயோர்க்கில் ஆற்றிய உரையில் கூறியுள்ளது பற்றி ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

சந்திரிகாவின் பதவிக்காலம் முடிவடைய இன்னும் சில மாதங்களே உள்ளன. இந்த நிலையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சமஷ்டி முறையை ஏற்படுத்தப் போவதாக அவர் கூறியிருப்பது வேடிக்கையானது. சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் போலித்தனமான உரையாகத் தான் நாங்கள் இதனைப் பார்க்கின்றோம்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலையில் கடல் கிராமங்களுக்குள் புகுந்தது

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்று மாலை 5.30 மணிக்கு திடீரென ஏற்பட்ட கடல் பெருகினால் மக்கள் பீதியடைந்து இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். உப்புவெளி, ஜெமாலியா, சிறிமாபுரம், சல்லி போன்ற கிராமங்களிலேயே கடல் பெருக்கெடுத்து கிராமத்திற்குள் நுழைந்துள்ளது.

இது பௌர்ணமி தினத்தில் ஏற்படும் சாதாரண கொந்தளிப்பே ஆகும். சுனாமி ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் எதுவும் இல்லை என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.பின்னர் மக்கள் வீடுகளுக்குத்திரும்பினர்

(32)

## புலனாய்வுத் துறையினருக்கு ஆயுதம் வழங்க சிறில.இராணுவத்தலைமையகம் மறுப்பு

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவப்புலனாய்வுப்பிரிவினரின் பாதுகாப்புக்கு ஆயுதங்களை வழங்க இராணுவ தலைமையகம் மறுத்துள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளிடமிருந்து ஆபத்து ஏற்பட்டிருப்பதாக உறுதிப்படுத்தினால் மட்டுமே இவர்களுக்கு ஆயுதங்களை வழங்கமுடியும் என்று தலைமையகம் அறிவித்துள்ளது. ஆனால் இது இராணுவப்புலனாய்வாளர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமது வாழ்வுரிமையைக் காக்கவே ஈழத்தமிழர்கள் ஆயுதத்தை எடுத்தனர்

### இந்திய புலனாய்வுத்துறை முன்னாள் அதிகாரி கார்த்திகேயன்

(புதுடில்லி)

இலங்கையில் தமிழர்கள் வாழ்வுரிமையைக் காக்கவே ஆயுதங்களைக் கையில் எடுத்தார்கள் என்று ராஜீவ் கொலை குறித்து விசாரணை நடத்திய இந்தியப் புலனாய்வுத் துறையின் முன்னாள் அதிகாரி கார்த்திகேயன் கூறியுள்ளார்.

ராஜீவ் வழக்குவிசாரணை தொடர்பாக ஆங்கிலத்தில் கார்த்திகேயன் புத்தகம் எழுதியுள்ளார்.

இந்தப் புத்தகம் தமிழில் "வாய்மையின் வெற்றி" என்று வெளியாகவுள்ளது.இது தொடர்பாக தமிழ் நாட்டிலிருந்து வெளியாகும். 'ஜீனியர் விகடன்' இதழுக்குஅவர் அளித்துள்ள நேர் காணலிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையிலும், இந்தியாவிலும் பல கொலைகள் நடந்தும் இன்னும் இலங்கையில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிளி.யில் குளப்பாசனத்தின் கீழ் பெரும்போகச்செய்கை இல்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை பெரும்போகத்தில் குளங்களில் இருந்து நீர்பாசனம் பெற்று நெற்செய்கை மேற்கொள்வதைக் கைவிடுவதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இடைப்போகமாக சனவரியில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

நேற்று முன்தினம் கிளிநொச்சி கமக்கார அமைப்புக்களின் சம்மேளன

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும்

### அமெ.தெற்காசிய விவகார உதவிச் செயலாளர்

(வோஷிங்டன்)

சிறிலங்கா அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் உடனடியாக பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் கிறிஸ்ரீனா ரொக்கா தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா வெளி விவகார அமைச்சர் அவரது பண்டார நாயக்கவை நியூயோர்க்கில் சந்தித்துப் பேசிய

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாடு திரும்பியதும் சந்திரிகா ஐ.தே.கட்சியுடன் பேசுவார்!

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியூயோர்க்கிலிருந்து திரும்பியதும் ஐ.தே.க முக்கியஸ்தர் மலிக்சமரவிக்கிரமவுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மகிந்த ராஜபக்ஷ சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவின் ஆலோசனைகளுக்கு ஏற்ப நடந்து கொள்ளத் தவறிவரும் நிலையில், ரணில் விக்கிரமசிங்க சனாதிபதித்தேர்தலில் வெற்றி பெற்றால், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கியதேசியக்கட்சியும் இணைந்து தேசியஅரசாங்கம் அமைப்பது தொடர்பாகவும் அதற்கு அநுராபண்டார நாயக்கவை பிரதமராக நியமிப்பது தொடர்பாகவும் இப் பேச்சுவார்த்தையில் முக்கியமாக

(12ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்தத்தை அமுலப்படுத்த பேச்சு வார்த்தை குறித்து ஆராய்வு!

### நியூயோர்கில் சந்திரிகா - நோர்வே பிரதமர் சந்திப்பு

(நியூயோர்க்)

யுத்த நிறுத்தத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்காக தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசிற்கும் இடையில் பேச்சுவார்த்தையை விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து நியூயோர்க் நகரில் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் நோர்வே பிரதமருக்குமிடையே நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின் போது ஆராயப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்குமிடையில் விரைவில் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பது குறித்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கருத்துக்கள் இந்தச் சந்திப்பின் போது பரிமாறப்பட்டுள்ளன.

இதில் நோர்வே தரப்பில் நோர்வே பிரதமர் மற்றும் வெளி விவகார அமைச்சர், பிரதி வெளி விவகார அமைச்சர் விதார் ஹெலகேசன் ஆகியோரும் சிறிலங்கா தரப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினரின் சுற்றி வளைப்பு போர் நிறுத்த ஒப்பந்த மீறல்!

(மன்னார்)

மன்னாரில் சிறிலங்கா இராணுவம் திடீர் சுற்றி வளைப்பு தேடுதல்களை மேற்கொண்டது. போர்நிறுத்த ஒப்பந்தத் திற்கு மாறானதென போர் நிறுத்த சர்வதேச கண்காணிப்புக் குழுவிடம் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் முறையிட்டுள்ளார்.

நீடிக்கப்பட்ட அவசர காலச் சட்

(12ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் அனைவரும் எழுச்சி அடைவார்களாயின்

தமிழீழம் உருவாகுவதை எவராலும் தடுக்க முடியாது.


— தியாகி லெப்.கேணல் திலீபன்



## நாட்டுப்பற்றாளர் கௌரவிப்பு நினைவு நாள்

**முல்லைத்தீவில் கடந்த 26.12.2004 அன்று ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின்போது சாவடைந்த**

| தாயின் மடியில் | கடலின் கோரப் பிடியில் |
|---|---|
| 1956 - 03 - 24 | 2004 - 12 - 26 |



அமரர்

நாட்டுப்பற்றாளர்

**அன்னலிங்கம் -சொர்ணலிங்கம்**

வட்டுவாகல் முல்லைத்தீவு

*நாம் அனைவரும் கூட்டுறவுடன் வாழ*
*நல்கருத்து பல கூறி கடல்த் தொழிலாளர் கூட்டுறவு*
*சமாசத்திற்கு பல நன்மைகள் புரிந்த நண்பனே.*
*கடல்கோள் அனர்த்தம் உன்னை காவு கொண்டாலும்*
*நாட்டின்மீது நீர் வைத்த பற்று என்றும்*
*நினைவினில் கொள்வோம்.*

குறிப்பு:- இவரது திருவுருவப்படம் 17.09.2005 (நேற்று) மாலை 3.00 மணிக்கு வட்டுவாகலில் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு 18.09.2005 (இன்று) மாலை 3.00 மணிக்கு எடுக்கப்பட்டு வட்டுவாகல் அ.த.க.பாடசாலையில் நினைவுரைகள் நடைபெறும்.

என்றும் நினைவுடன் :-

**முல்லை. மாவட்ட கடல்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசமும் அதன் கிளைச்சங்கங்களும் முல்லைத்தீவு.**

(சி-12858)

# வவு.தெற்கு முன்பள்ளிகளுக்கான சமாதான அபிவிருத்தி நிகழ்வு

சி.எச்.ஏ. நிறுவனத்தின் நிதியுதவியுடன் வவுனியா தெற்கு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தால் மூவின மக்களையும் ஒன்றிணைத்து நடைமுறைப்படுத்தும் சமாதானத்தை மேம்படுத்தும் செயற்பாட்டின் கடைசி நிகழ்வானது கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணி தொடக்கம் 12.00 மணிவரை பூந்தோட்டப் பிரதேசத்தின் குடியிருப்பு சி.சி. ரி.எம்.எஸ் பாடசாலையில் முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பூவரசங்குள விண்மீன்கள் முன்பள்ளி சிறுவர்களும் பெற்றோர்களும் (75பேர்), சூடுவெந்த புலவு முஸ்லிம் சிறுவர் பாடசாலை சிறுவர்களும், பெற்றோர்களும்(50பேர்), சிங்களப் பிரிவு முன்பள்ளி சிறார்களும் பெற்றோர்களும் (50பேர்), செட்டிகுளப்பிரிவில்அடம்பன்குள முன பள்ளிச் சிறார்களும் பெற்றோர்களும் (50பேர்),மெனிக்பாம் முன்பள்ளி சிறார்களும் பெற்றோர்களும் (55 பேர்), சமயபுர முன்பள்ளிச் சிறார்களும் பெற்றோர்களும் (30பேர்) மற்றும் முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர், சிங்களப்பிரிவில் உதவிக் கல்விப்பணிப்பாளர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், நலன் விரும்பிகள், வலயப் பிரதேச இணைப்பாளர்கள்,பிரதேசக்கட்டமைப்பு உறுப்பினர்கள் ஆகியோரும் சுமார் 300 பேர் அளவில் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் மூவின சிறார்களின் சமாதானத்தை வலியுறுத்தும் ஆடல், பாடல்,பேச்சு, கவிதை என்பவற்றுடன் முன்பள்ளிப் பெற்றோர்களின், ஆசிரியர்களின் நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வு மூவின பெற்றோர்களாலும், சிறுவர்களாலும் சமாதானத்தை வரவேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## நேர்முகத் தேர்வு

கிளிநொச்சி வலயக்கல்விப்பணிமனைக்குட்பட்ட அதிபர்கள் இல்லாத வெற்றிடமாகக்காணப்படும். பாடசாலைகளிற்கான அதிபர்களை நியமனம் செய்வதற்கான நேர்முகத் தேர்வு நாளை திங்கள் காலை 9.00 மணிக்கு வலயக்கல்விப்பணிமனையில் நடைபெறவுள்ளது. இது விடயமாக விண்ணப்பித்தவர்களிற்கு நேர்முகத்தேர்வுக்குரிய கடிதங்கள் கோட்டக்கல்விப் பணிப்பாளர் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது விடயமாக கடிதத்தில் குறிப்பிட்ட உரிய ஆவணங்களுடன் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்குமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (34)

## உலக ஆசிரிய நாளை முன்னிட்டு வாண்மை விருத்தி எழுத்தாக்கப் போட்டி

(பூநகரி)

பூநகரி வலயதிற்குட்பட்ட கரைச்சி, கண்டாவளை,பூநகரி, பளை ஆகிய கோட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கிடையேயான கவிதை, கட்டுரை, சிறுகதை போன்ற எழுத்தாக்கப் போட்டிகளும், வாண்மை விருத்திப் பரீட்சையும் நடைபெறவுள்ளது.

நாளைபூநகரி மகாவித்தியாலயம் பளை மத்தியகல்லூரி,முருகானந்தா மகாவித்தியாலயம், கிளி மத்திய கல்லூரி ஆகிய நான்கு பாடசாலைகளில் முற்பகல் 10.00 மணி முதல் 11.00 மணி வரை வாண்மை விருத்தி பரீட்சையும்11.30- 1.30 வரை கவிதை சிறுகதை, கட்டுரை போட்டிகளும் நடைபெறவுள்ளது.

விண்ணப்பித்தவர்களும்ஆர்வமுள்ள அனைவரும் பங்கு பற்றலாம் என வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராசா அறிவித்துள்ளார். (34)

## உலக உணவு ஸ்தாபன நிதியுதவியுடன் த.பொ.மே.நிறுவனம் விவசாயிகளுக்கு உதவி

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்ட ஈச்சலம் பற்றுபிரதேசத்தில் வெருகல் முகத்துவாரத்தைச் சேர்ந்த 50 விவசாய குடும்பங்களிற்கு உலக உணவு ஸ்தாபன நிதியுதவியுடன் தமிழீழ பொ.மே நிறுவனத்தினரால் தலா ஒரு அந்தர் வெங்காயம் அதற்குரிய இரசாயனப் பசளைகள் மொத்தமாக 8000ரூபா பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் மங்களேஸ் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மூதூர் கிழக்குப் பிரதேச விசாய போதனாசியர் அச்சுதன் வெங்காய செய்கை மற்றும் நோய்த்தாக்கம் பற்றிய பயிற்சிவகுப்பு ஒன்றையும் நடாத்தியுள்ளார்.



# காஸாவில் குழப்பநிலையைக் கட்டுப்படுத்த கூடுதல் பொலிசார் அனுப்பிவைப்பு

மூன்று நாட்களுக்குள் நிலைமைக்கட்டுப்படுத்தப்படுமென்கிறார் அப்பாஸ்

(ஜெருசலேம்)

**காஸாப் பகுதியில் குழப்ப நிலையைத் தடுப்பதற்கு பலஸ்தீனியப் பொலிசார் கூடுதலாக அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக பலஸ்தீனத் தலைவர் அப்பாஸ் கூறியுள்ளார்.**

எகிப்துடனான காஸா எல்லைப் புறவழியாக மக்கள் வெளியேற்றத்தைத் தடுப்பதற்கு இந்த நடவடிக்கை எக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுகின்றது.

இஸ்ரேல் அங்கிருந்து வாபஸ் பெற்றதன் பின்னர் எல்லைப்புறத்தில் குழப்ப நிலை தோன்றியுள்ளது. எல்லைப்புறத்தைத்தாண்டி மக்கள் செல்வதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பலஸ்தீன சனாதிபதி மகமூத் அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீன மற்றும் எகிப்திய பொலிசார் எல்லைப்புற வாயில்களை மூடி மக்கள் வெளியேறுவதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளார்கள். மூன்று நாட்களுள் நிலைமைகட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்படும் என்று அவர்கள் தெரிவித்துள்ளார்கள். காஸாப் பகுதியில் ஆயுதக்குழுக்களின் போட்டி காரணமாகவும் அரசாங்கத்தின் மீதான ஊழல் குற்றச்சாட்டு காரணமாகவும் குழப்பமும், வன்முறைகளும் அதிகரித்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.



இந்தோனேசியாவின் பண்டாஆஷே மாகாணத்தில் சுதந்திர ஆஷே இயக்கத்தினால் கையளிக்கப்பட்ட ஆயுதங்களை அஷே போர் நிறுத்தக் கண் காணிப்பாளர்கள் அழிக்கின்றனர்.



கடந்த வியாழன் ஈராக் பாக்தாத்தில் தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதலில் 23 ஈராக்கியர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயங்களிற்கும் உள்ளானார்கள். இத்தாக்குதலில் அருகிலிருந்த கட்டடமும் தீப்பற்றி எரிந்தது.

## போராட்டம் நடத்த திட்டமிட்டிருந்த 87 பத்திரிகையாளர் நேபாளத்தில் கைது

(காத்மண்டு)

நேபாளத்தில் செய்திப் பத்திரிகைளுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை அகற்றக் கோரி பேரணி நடத்த திட்டமிட்டிருந்த 87 பத்திரிகையாளர்களை அந்நாட்டு பொலிசார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர். இந்தப் பத்திரிகையாளர்கள் தற்போது காத்மண்டுவில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாக நேபாள பத்திரிகை சம்மேளனம் தெரிவித்துள்ளது.

## லெபனானில் கார்க்குண்டு வெடிப்பு; ஒருவர் பலி, 23 பேர் காயம்

(பெய்ரூட்)

லெபனானின் தலைநகர் பெய்ரூட்டை அடுத்துள்ள கிறிஸ்தவ மக்கள் வாழும் பகுதியில் நேற்று முன்தினமிரவு கார்க்குண்டொன்று வெடித்ததில் ஒருவர் பலியாகியும், 23 பேர் காயமடைந்துள்ளார்களென்று செஞ்சிலுவைச்சங்கம் மற்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தக்குண்டுத்தாக்குதல்களினால் இரண்டு வாகனங்கள் தீப்பற்றி எரிந்துள்ளன. காயமுற்றவர்கள் அம்பியூலன்ஸ் வண்டிகளில் எடுத்துச் செல்லப்பட்டு அண்மையிலுள்ள வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தில் மேலும் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

லெபனானின் முன்னாள் பிரதமர் மந்திரி அல்ஹரிரியின் படுகொலை கடந்த பெப்ரவரி மாதம் இடம் பெற்றதன் பின்னர், பெய்ரூட்டில் கிறிஸ்தவ மக்கள், பெரும்பான்மையாக வாழுகின்ற வர்த்தகபிரதேசத்தில்தொடர்ச்சியாக வன்முறைகள் இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடிக்க அமெரிக்காவின் கொலம்பியா மா நிலம் புகாராமங்காவில் தேனீக் கூட்டைத்தன் மீது படரவிட்டுள்ள ...

-ஆப்கான் தேர்தலையொட்டி-

## ஆப்கான் -பாக். எல்லைப்பகுதிக்கு கூடுதல் படைகள் முசாரப்பால் அனுப்பிவைப்பு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் ஆப்கானிஸ்தான் எல்லையையொட்டிய வடக்கு பாகிஸ்தான் பகுதியில் தேடுதல் வேட்டையொன்றில் ஈடுபட்ட பாகிஸ்தான் இராணுவம் 30பேரைக் கைது செய்து அவர்களிடமிருந்த பெருமளவான ஆயுதங்களையும் பறிமுதல் செய்துள்ளது.

எல்லையைப் பாதுகாக்கவும் தீவிரவாதிகள் ஆப்கானிஸ்தானிற்குள் செல்வதைத் தடுக்கவும் தன்னால் இயன்றதைச் செய்வதாக பாகிஸ்தான் கூறுகிறது. ஆப்கானிஸ்தானில் நேற்று பாராளுமன்றத் தேர்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறுவதையொட்டி பாகிஸ்தானின் ஆயிரக்கணக்கான துருப்புக்களை எல்லைப்பகுதிக்கு அனுப்பியுள்ளது.

இந்நிலையில் மக்களை வாக்களிக்கக்கூடாது என்று தலிபான்கள் எச்சரித்துள்ளனர்.

இங்கு 30ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போதுதான் தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் தலிபான்களின் துப்பாக்கிக் குண்டுகளுக்கும் தனது வாக்குச் சீட்டின் வல்லமைக்குமிடையே அந்நாட்டு பாமர மனிதர்கள் சிக்கித் தவிக்கின்றார்கள் என ஆய்வாளர்கள் தெரிவித் துள்ளனர்.

## 7 தலிபான் சந்தேக நபர்கள் அமை. படையினரால் சுட்டுக்கொலை

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தென்கிழக்கு சபூல் மாகாணத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றில் ஆப்கான் மற்றும் அமெரிக்க பந்தோபஸ்துப் படைகள், எனச் சந்தேகிக்கப்படும் ஏழு தலிபான் தீவிரவாதிகளை சுட்டுக்கொன்றுவிட்டதாக கூறப்படுகின்றது. அதேவேளை கில்முன் மாகாணத்தில் தலிபான் தீவிரவாதிகள் ஒரு வேட்பாளரை சுட்டுக்கொன்று விட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## லைபீரிய இடைக்காலத் தலைவர் உலகநாடுகளுடன் 83 ஒப்பந்தங்கள்

லைபீரியாவின் இடைக்காலத் தலைவர் கயூம்ஜன்பேறாம் நியூயோர்க்கில் உலகநாடுகளின் தலைவர்களது உச்சி மாநாட்டின் போது பலநாட்டுத் தலைவர்களுடன் 83 ஒப்பந்தங்களை செய்து கொண்டுள்ளார்.

மேற்கு ஆபிரிக்க நாட்டில் பலவருட கால உள்நாட்டுயுத்தத்திற்கு பின்னர் சனநாயக ஆட்சி முறை பின்பற்றப்படுகின்றது.

லைபீரியா கஷ்ரமான கடந்த காலத்தைந்தாண்டி மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து சனநாயக வழிமுறைகளைப் பின்பற்றும் நிலையில் இது முக்கியமான சாதனையாகும் என்று ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபிஅனான் தெரிவித்துள்ளார்.

2003 ஆம் ஆண்டு சனாதிபதி ரான்ஸ்ரயலர் நாட்டைவிட்டு வெளியேறிய பின்னர் இடைக்கால அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. அதற்கு உதவியாக சுமார் 15 ஆயிரம் அமைதிகாக்கும் படையினரும் ஆயிரத்திற்கும் அதிகமான சர்வதேச பொலிசாரும் அங்கு கடமையாற்றி வருகின்றனர்.

லைபீரியா 14 வருடகால உள்நாட்டு யுத்தத்தில் இருந்து இப்போது மீட்சி பெற்றிருக்கின்றது. அங்கு ஒக்ரோபர் மாதம் 11 ஆம் திகதி சனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெறவுள்ளது.

## ஹெயிட்டி சனாதிபதித் தேர்தலில் 50 இற்கு மேற்பட்டோர் போட்டி

ஹெயிட்டியில் இம்முறை நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலில் 50 இற்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர். ஹெயிட்டியில் பதவி கவிழ்க்கப்பட்ட ஜோன் பேற்றண்ட் ஆரிஸ்ரேற்றின் குடும்பத்தின் சார்பில் இரண்டு வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளார்கள்.

முன்னாள் பொலிஸ் அதிபர் ஹையப்பிலிபே,கோடிஸ்வரர் குமரான்ஸ் ஷிமேயஸ் ஆகியோர் உட்பட முன்னாள் சனாதிபதிகளான ரோனிபிரேபல், லெஸ்லி மசியஸ் ஆகியோர் முக்கிய வேட்பாளர்களாக கருதப்படுகின்றனர்.

நாளை மறுதினம் சனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அந்த நாட்டில் அமைதியை நிலைநாட்டக் கூடிய அரசாங்கம் ஒன்று உருவாக்கப்படும் என்று கருதுவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.



அமெரிக்காவின் வடக்கு கரோலினாவை கடந்த வியாழக் கிழமை வால்டர் பாத்பகுதி சூறாவளி தாக்கியது. சால்டர் பாத் கன்டி பகுதி இச் சூறாவளியால் சேதமடைந்து.

# பாதசாரிக்கடவைகளில் கவனம் செலுத்துக

# சாரதிகளிடம் காவல்துறை கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

**பாதசாரிக் கடவைகளில் மக்கள் வீதிகளைக் கடக்க உதவும் வகையில் வாகனங்களை நிறுத்தி பின் பயணத்தைத் தொடருமாறு தமிழீழ காவல் துறையினர் வாகனச் சாரதிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

இது தொடர்பாக விடுவிக்கப்பட்ட வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; அண்மைக் காலங்களில் வாகனங்களின் பாவனையென்பது தினமும் அதிக அளவில் அதிகரித்தவாறு செல்கின்றது. இவ்வாறு அதிகரித்துவரும் வாகனங்கள் போக்குவரத்துச் செய்வதும், பொதுமக்கள் வயது வேறுபாடின்றி வீதிகளைப் பாவிப்பதும் அதிகரித்த வண்ணமே உள்ளன. ஆனால் எமது பிரதேசத்திலுள்ள வீதிகளின் அளவு (அகலம்) இற்குப் போதுமானதாக இல்லை. வீதிகளின் அளவைப் பெரிதாக்க வண்டிய தேவையொன்று உள்ளது. தற்போதைய அரசியல் சூழலில் வீதிகளைப்பெரிதாக்க முடியாத நிலையும் இருந்துவருகின்றது. இதன் காரணமாக ஆங்காங்கே வீதி விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன. பெறுமதி மிக்க எம்மக்களின் உயிர்கள் பல வீதி விபத்துக்களால் பலியாகியுள்ளனர். பெருமளவானோர் காயமடைந்துள்ளனர். சொத்துக்களும் சேதமாக்கப்பட்டுள்ளனர். ஆகவே எமது மக்களின் உயிர்கள், உடமைகள் என்பவற்றைப் பாதுகாக்கும் நோக்குடன் தமிழீழ காவல்துறையின் வீதிப்போக்குவரத்துப்பிரிவினரால் முக்கியமான இடங்களில் காவல் துறை உறுப்பினர்கள் கடமையில் ஈடுபட்டிருப்பதுடன், வைத்தியசாலைகள், பாடசாலைகள் என்பவற்றுக்கு அருகாமையில் மக்கள் வீதியைக் கடப்பதற்காக பாதசாரிக் கடவைகள் மஞ்சள் நிறத்தில் குறியீடு இடப்பட்டுள்ளன. மக்கள் வீதிகளைக்கடக்கும் முகமாக இம்மஞ்சள் நிறத்தினால் குறியீடு இடப்பட்டிருக்கும் பாதசாரிக்கடவையினுள் வந்த உடனேயே சாரதிகளாகிய நீங்கள் உடனடியாக உங்கள் வாகனங்களை நிறுத்தி பாதசாரிகள் கடந்து சென்ற பின்னர் உங்கள் பயணங்களைத் தொடருங்கள். உங்களுக்கு இவ்வாறான வீதி ஒழுங்கு முறைகள் நன்கு தெரியும் என்ற நம்பிக்கையுடனேயே மக்கள் இப்பா தசாரிக் கடவையினூடாகக் கடக்க முற்படுகின்றனர் என்பதனையும் கருத்தில் கொள்ளவும்.

இவ்வீதிகளைப் பாவிப்பதும், பாதசாரிக்கடவைகளின் ஊடாக கடக்க முயல்வதும் வேறுயாருமில்லை உங்கள் பெற்றோர்கள், உடன்பிறப்புக்கள், நண்பர்கள், எம்தேசத்து உறவுகள் என்பதனை ஆழமாக மனதில் கொள்ளவும். நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வுடன் வீதிகளைப் பாவிப்பதன் மூலம் வீதி விபத்துக்களற்ற சூழலை உருவாக்குவோமாக. இதனால் சகலரும் நன்மை அடைவோம். (தீ)



கிளி.மத்தியகல்லூரி மாணவர்களுக்கு மனித உரிமைகள், சிறுவர் உரிமைகள் பற்றிய கருத்துரைகள் கடந்த வியாழக்கிழமை வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகப்பணிப்பாளர் அருட்திரு.கருணாரட்ணம் அடிகளாரினால் வழங்கப்பட்டது (படம் -பிரதீபன்)

## முல்லை.எழுச்சி மாநாட்டில் கலந்துகொண்ட மக்களுக்கு பாராட்டுத் தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

முல்லையில் நடைபெற்ற தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டில் கலந்து கொண்டு எமது தேசியத்தினை சர்வ தேசத்திற்கு எடுத்தியம்பிய அனைத்து மக்களுக்கும் பரந்தன் தேசிய எழுச்சிப் பேரவையினர் பாராட்டினைத் தெரிவித்துள்ளனர்.

கடந்த புதனன்று முல்லையில் நடைபெற்ற எழுச்சி நிகழ்வில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட எமது உறவுகள் உணர்வெழுச்சியுடன் பங்கேற்று வரலாறு படைத்துள்ளனர்.

எமது ஒருமித்த குரலை சர்வ தேசத்திற்கும் சிறிலங்கா அரசுக்கும் நாம் ஒரு கொடியின் கீழ் நிற்கின்றோம் எமது தலைவிதியை நாமே நிர்ணயித்து இறைமையுடனும் தன்னாட்சியுடனும் தனியாகப்பிரிந்து தனியரசை அமைத்து வாழத்துடிக்கின்றோம் என்பதனை உணர்த்தி நின்ற எமது முல்லை.மாவட்ட அனைத்து உறவுகளுக்கும் ஏற்பாட்டு செயலணிக்குழுவினருக்கும் கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர் மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர். -(சோ)

# மட்டு - அம்பாறை மாவீரர் நினைவு மண்டபத்தில் லெப். கேணல் திலீபன் நினைவு நிகழ்வுகள்

"தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் 18ஆம் ஆண்டு நினைவு நாள் ஆரம்ப நாள் நிகழ்வுகள் மூங்கிலாற்றில் அமைந்துள்ள மட்டு-அம்பாறை மாவீரர் நினைவு மண்டபத்தில் மிகவும் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது.

கடந்த வியாழன் காலை 9.55 மணிக்கு மட்டு-அம்பாறை தொடர்பகப் பொறுப்பாளர் இராசு தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றது. இந்நிகழ்வில் பொதுஈகச்சுடரினை ஜெயந்தன் படையணிப்போராளி சதாரூபன் ஏற்றிவைக்க, தமிழீழத்தேசியக் கொடியினை ஜெயந்தன் படையணிப் போராளி குணம் ஏற்றிவைத்தார். அந்நிகழ்வைத்தொடர்ந்து தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் திருவுருவப்படத்திற்கு ஜெயந்தன் படையணிப்போராளி குணமதியன் சுடரேற்றிவைக்க, சரஸ்வதி அம்மா மலர்மாலை அணிவித்தார். அதனைத் தொடர்ந்து மக்களும்,போராளிகளும் அகவணக்கமும், மலர்வணக்கமும் செலுத்தினர். இந்நிகழ்வில் மட்டு-அம்பாறை தொடர்பகப்பொறுப்பாளர் இராசு கருத்துரைகளை வழங்கினார்."

# பூநகரி காயமுனங்கு வீதியை செப்பனிடக் கோரிக்கை

(பூநகரி)

பூநகரி பரந்தன் வீதியில் தம்பிராய் சந்திக்கு வடக்குப்புறமாக செட்டிய குறிச்சி சந்தியை நோக்கிச் செல்லும் இரண்டரைக் கிலோமீற்றர் நீளமான வீது குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இவ்வீதியால் குடமுறுட்டி ஆற்றுமண் உழவியந்திரத்தின் மூலம் கொண்டு செல்ல முடியாது. அவை புதைந்து மண் அதே இடத்தில் பறிக்கப்பட்டு இருப்பதையும் காணலாம். அத்துடன் செல்லையா தீவிற்கு கிறவல் மண் கொண்டு செல்வதற்கு தம்பிராய்ச் சந்தியில் டிப்பர் மூலம் மண்பறிக்கப்பட்டு பின்னர் பல கிராமங்களின் மத்தியில் அங்கு கொண்டு செல்லப்பட்டது. இக்கோடை காலத்திலேயே இந்நிலை என்றால் இனி வரும் மாரிகாலங்களில் நிலைமை எவ்வாறு இருக்கும் என்பதனை எவரும் அறியக் கூடியதாக இருக்கும்.

அத்துடன் இவ்வீதியால் செல்லையாதீவு, கறுக்காய்த்தீவு, ஞானிமடம், மறவகுறிச்சி, செட்டியகுறிச்சி கிராமத்தைச் சேர்ந்த பல நூறுமக்கள் பிரயாணத்தை மேற்கொள்கின்றனர். இவ்வீதி மழைநேரத்தில் வெள்ளமாகவே காணப்படும். மாரிகாலம் வந்தால் இவ்வீதியால் செல்லும் மக்கள் தம்பிராய்ச் சந்திக்கு வருவதானால் ஐந்து கிலோமீற்றர் தூரம் மேலகதிகமாகச் செல்லவேண்டும். இந்நிலைமையைக் கருத்திற்கொண்டு இவ்வீதியைப் புனரமைக்க ஆவன செய்யுமாறு மக்கள் வேண்டுகோள் விடுகிக்கின்றனர். (34)

## திலீபன் மருத்துவ சேவையினரின் சிறப்பு மருத்துவ சேவை

(கண்டாவளை)

தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் 18ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு பிரமந்தனாறு கல்லாறு முகாமில் இன்று காலை 9.00 மணிமுதல் மாலை 4.30 மணி வரை தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது. இச்சேவையில் அரசியல் துறையினரும் பிரமந்தனாறு திலீபன் மருத்துவ சேவை நிலைய அபிவிருத்திக் குழுவினரும் இணைந்து செயற்படவுள்ளனர். (14)

## மின்சாரம் தடைப்படல்

மின்பிறப்பாக்கியில் பராமரிப்பு/திருத்த வேலைகள் நடைபெறவுள்ளதால் கிளிநொச்சிப் பகுதியில் இன்று அதிகாலை 4.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை மின்சாரம் தடைப்படுமென மின்சாரசபையினர் வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றனர்.

## தியாக தீபம் திலீபன் நினைவாக சுற்றுச் சூழல் துப்புரவுப்பணி

முல்லைத்தீவு நகரப் பகுதியில் தியாகதீபம் திலீபனின் 18 ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு சுற்றுச் சூழல் துப்புரவுப் பணி கரைதுறைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் இ.கிருஷ்ணபிள்ளை தலைமையில் நேற்று முன்தினம் காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமானது.

தமிழீழ சுகாதார சேவையினர், முல்லை. மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர், பொது சுகாதார பரிசோதகர்கள் இணைந்து இந்தப் பணியில் ஈடுபட்டனர். உணவகங்கள், பலசரக்குக் கடைகள், ரயர்க்கடைகள், ஏனைய அனைத்து இடங்களிலும் இந்தப் பணி நடைபெற்றது. இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்கினர். (20)

## திறப்பு விழா

(அலுவலக செய்தியாளர்)

தனியார் பேருந்து உரிமையாளர் கழக வன்னிப்பணிமனை திறப்பு விழா பரந்தனில் எதிர்வரும் 20ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு இடம் பெறவுள்ளது.

அன்றைய பணிமனைத் திறப்பு விழா நிகழ்வில் தனியார் பேருந்து உரிமையாளர்கள் அனைவரையும் கலந்து நிகழ்வினை சிறப்பிக்கும் வண்ணம் வன்னி தனியார் பேருந்து உரிமையாளர் கழக செயலர் வேண்டுகை விடுத்துள்ளார். (சோ)



கடந்த 12. 9. 2005 அன்று சிறந்த கால்நடை வளர்ப்போர் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட சிறந்த கால்நடைப் பண்ணையாளர் ஒருவருக்கு ஒட்டி சுட்டான் கால்நடை வைத்தியர் சிவகுமார் காசோலையினை வழங்கிக் கௌரவிக்கின்றார். (படம்-கவியரசன்)



முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான கண் சிகிச்சை கள்ளப்பாடு தற்காலிக குடியிருப்பு கேட்போர் கூடத்தில் கடந்த மாதம் 25ஆம் திகதி அன்று நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டது. (படம்-சகிலா)

## மாவட்ட மட்டத்தில் முதலிடம்

(வவுனியா செய்தியாளர்)

க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் வவுனியா மாவட்டத்தில் கலைப்பிரிவில் பெரியகோமரசன்குளம் மகாவித்தியாலய மாணவன் இராமலிங்கம் சந்திரகாந்தன் 3 ஏ பெறுபேறுகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றுக்கொண்டார்.

இதேவேளை இப்பாடசாலை மாணவனான மணியம் சிவகுமார் என்பவர் கலைப்பிரிவில் 3ஏ பெறுபேற்றைப் பெற்று மாவட்டத்தில் 7 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். இப்பாடசாலையில் இருந்து உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய 28 மாணவர்களில் 25 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக அதிபர் தளையாலசிங்கம் தெரிவித்தார். (10)

## பூநகரிப் பிரதேசத்தில் ஏர் பூட்டு விழா

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரிப் பிரதேசத்தில் 2005,2006ஆம் ஆண்டிற்கான பெரும்போக நெற்செய்கைக்கு பாரம்பரிய முறைப்படி ஏர்பூட்டு விழா நடைபெற்று, நெல்விதைப்பு ஆரம்பித்துவைக்கப்பட்டது.

கடந்த எட்டாம் திகதி காலை எட்டு மணிக்கு பூநகரி செல்லையாதீவு கிராமத்திலுள்ள கண்ணகை அம்மன் ஆலயத்தில் சம்பிரதாய பூர்வமாக பூசைகள் நடைபெற்று கொல்லகுறிச்சிக் கிராமத்தில் நெல் விதைப்பு விழா ஆரம்பித்து வைக்கப்பட்டது. நிகழ்வில் முதலில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திஇராசநாயகம் நெல்விதைத்து விழாவைத் தொடக்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் அருள் மற்றும் பூநகரிப் பிரதேச செயலர் மற்றும் கமக்காரர்கள் நெல்விதைப்பை மேற்கொண்டனர். பாரம்பரிய முறைப்படி மாட்டால் முதலில் உழவு மேற்கொள்ளப்பட்டது. விழாவில் கருத்துரைகளை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திஇராசநாயகம், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சிகரிகாலன் பூநகரிப் பிரதேச செயலர், கிளிநொச்சி மாவட்ட உதவிவிவசாயப் பணிப்பாளர் சீ.ஆனந்தராசா மற்றும் பலர் வழங்கினார்கள். (46,34)

# மாதகல் மருத்துவமனை சுற்றாடலில் மிதிவெடிகளை அகற்ற பி. செயலர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**யாழ் – மாதகல் மருத்துவமனையின் அயல் பிரதேசங்களில் சிறிலங்கா படையினரால் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதி வெடிகளை அகற்ற உடன் நடவடிக்கைகளை எடுக்குமாறு வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலாளர் ருபீனிவரதலிங் கம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

மேற்படி வைத்தியசாலையினை அண்டிய பிரதேசங்கள் பொதுமக்களின் பாவனைக்காக விடுவிக்கப்பட்டுள்ள நிலையிலும் இப்பிரதேசங் களில் சிறிலங்கா படையினரால் புதைத்துவைக் கப்பட்டிருக்கும் மிதி வெடிகள் அகற்றப்பட வில்லை.

இதனால் இப்பகுதியில் மக்கள் மீளக்குடி யமர முடியாதநிலை காணப்படுவதுடன், மாதகல் வைத்தியசாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளமை யைச்சுட்டிக்காட்டி மேற்படி கோரிக்கையை விடுத்துள்ள வலிகாமம் தென் மேற்கு பிரதேச செயலர் இப்பகுதியில் மிதிவெடி அகற்றலை ஆரம்பிக்கக்கோரும் கடிதம் ஒன்றையும் யாழ்- மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு குழுவினருக்கு அனுப்பி வைத்துள்ளார். (33)

# வடமராட்சியில் சுனாமியால் சேதமான பாடசாலை மீளமைப்புப் பணிகளை துரிதப்படுத்துக!

## -வலயக்கல்விப் பணிமனை அதிகாரிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சியில் சுனாமி அனர்த்தத்தி னால் சேதமாகிப்போன பாடசாலைகளை மீள் நிர்மாணம் செய்வதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படவில்லை என வடமராட்சி வலயக்கல்விப்பணிமனை அதிகாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் ஏற்பட்ட சுனாமி ஆழிப் பேரனர்த்தத்தினால் வடமராட்சி கரையோர பிரதேசங்களில் உள்ள பாடசாலை கள் சேதமடைந்தன.

இதனையடுத்து இப்பாடசாலைகளும் தற் காலிக கொட்டகைகளிலேயே இயங்கி வருகின் றன.

எனினும் சேதமான பாடசாலைகளைப் புனர மைக்கவோ அல்லது மீள்நிர்மாணம் செய்வ தற்கோ அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங் கள் எதுவும் ஆக்க பூர்வமான நடவடிக்கை களை எடுக்கவில்லை.

இதனால் இப்பாடசாலைகளின் மாணவர்கள் தற்காலிக கொட்டகைகளிலேயே தொடர்ந்தும் கல்வி பயின்று வருவதால் இம்மாணவர்கள் உளப்பாதிப்புகளுக்கு உள்ளாகியிருப்பதாகவும் கல்வித் திணைக்கள அதிகாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (33)

# யாழ்.மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் மூன்று நாள் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருநெல்வேலியில் உள்ள யாழ். மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையத்தில் மூன்று நாள் விவசாய கண்காட்சி ஒன்றை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கண்காட்சி எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகி 22.ஆம் திகதிவரை தொடர்ச்சியாக மூன்று நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியின் ஆரம்பநாள் நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கண் காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார். இக் கண்காட்சியில் விவசாய நீர்ப்பாசன தொழில் நுட்பங்கள், விவசாய உபகரண தொழில் நுட் பங்கள், விவசாயபயிர்ச்செய்கை நுட்பங்கள் என்பன குறித்த பொருட்கள் காட்சிப் படுத்தப்படவுள்ளன. (33)

# ம.உ. ஆணைக்குழுவால் சிறுவர்களிடையே போட்டி

(யாழ்ப்பாணம்)

ஒக்ரோபர் முதலாம் திகதி உலகசிறுவர் தினததை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்தால் யாழ். குடா நாட்டில் நலன்புரி நிலையங்கள் முகாம்களில் தங்கியுள்ள சிறுவர்களுக்கிடையேயான பேச்சு மற்றும் கட்டுரைப்போட்டிகள் நடாத்தப்பட்டுவருகின்றது. (28)

# உயர் பாதுகாப்பு வலயத்தை நீக்கி மீளக்குடியமர்த்தக் கோரி க.குழுவிடம் பல மகஜர்கள் கொடுத்தும் நடவடிக்கை இல்லை

## -தென்மராட்சி பொது அமைப்புக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தென்மராட்சியில் பொதுமக்களது வாழ்விடயங்களை ஆக்கிரமித்துள்ள இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி அங்கு மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஆயிரத்துக்கும் மேற்பட்ட மகஜர்கள் கண்காணிப்புக்குழுவினரிடம் கைய ளிக்கப்பட்டுள்ள போதும் இது வரையில் உரிய நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லையென தென்மராட்சி பொது அமைப்புக்கள் ஒன்றியம் விசனம் தெரிவித்துள்ளது.

தென்மராட்சியில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தின் பாதுகாப்பு வலயக் கெடுபிடி நடைமுறைகளால் சுமார் 4000 குடும் பங்கள் தமது சொந்த இடங்களில் சென்று மீளக்குடியமர முடியாது தொடர்ந்தும் அகதி முகாம்களிலும், நண்பர், உறவினர் வீடுகளிலும் அகதிவாழ்வு வாழ்ந்து வருகின்றன.

இவ்வாறு வாழ்ந்து வரும் பாதிக்கப்பட்ட மககள் தமது வாழ்விடங்களை ஆக்கிரமித்து நிற்கும் இராணுவத்தை வெளியேற்றி யுத்தநிறுத்த ஒப்பந் தத்தின் பிரகாரம் தம் மீள்குடியமர்வையும் இயல்பு வாழ்வையும் உறுதிப்படுத்தக் கோரி பல மகஜர்களை இதுவரையில் இலங்கை யுத்தநிறுத்தக் கண் காணிப்புக்குழுவினரிடம் கையளித்துள்ளனர்.

எனினும் அவர்கள் இதற்கு உரிய நடவடிக் கைகளை எடுக்காதிருப்பதால் மக்களின் மீள் குடியமர்வும் இயல்புவாழ்வும் பாதிக்கப்பட்டுள்ள தாகச் சுட்டிக்காட்டியே தென்மராட்சிப் பொது அமைப்புக்கள் விசனம் தெரிவித்துள்ளன. (33)

# மந்திகை வைத்தியசாலைக்கு இந்தியா 5கோடி ரூபா உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். மந்திகை வைத்தியசாலையின் வைத் திய சேவைத்தொழில்நுட்ப வசதிகளை அபி விருத்தி செய்வதற்காக இந்திய அரசாங்கம் ஐந்து கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

யாழ்- மந்திகைவைத்தியசாலையில் காணப் படும் வைத்தியசேவைத்தொழில்நுட்ப வசதி யீனங்களால் இங்கு வைத்தியசேவைகளைப் பெறவரும் நோயாளர்களுக்கு திருப்திகரமான வைத்திய சேவைகளை வழங்க முடியாத நிலை காணப்படுகிறது.

இதனால் இங்குவரும் பல்லாயிரக்கணக் கான நோயாளர்கள் பாதிக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டி இவ்வைத்தியசாலைக்கு அண்மை யில் வருகைதந்த இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமாராவிடம் மந்திகை வைத்திய சாலை நிர்வாகத்தினர் விடுத்த கோரிக்கைகளைத் தொடர்ந்தே இந்திய அரசு இவ் ஐந்து கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

இந்நிதி மூலம் வைத்தியசாலையின் தேவைக ளுக்கான வைத்திய தொழில் நுட்பஉபகரணங் கள் , இயந்திரங்கள் என்பன கொள்வனவு செய்யப படவுள்ளன என்று மந்திகைவைத்தியசாலை பொறுப்பதிகாரி கதிரவேற்பிள்ளை கூறினார்.(33)

# கொடிகாமத்தில் குழு மோதலில் காயமடைந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொடிகாமம் பகுதியில் நடைபெற்ற குழுமோதலின் போது காயமடைந்து யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள எட்டுப்பேரில் ஒருவர் நேற்று முன்தினம் வைத்தியசாலையில் மரணமானார்.

கடந்த ஏழாம் திகதி இரு குழுக்களிடையே கொடிகாமம் நகரை அண்டிய நாவலடிப்பகுதியில் நடைபெற்ற மோதலில் வேட்டைத்துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தவரான-தவசி குளத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி ரங்கன் (வயது31) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் மரணவிசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் மாலை அவரது உறவினர்க ளிடம் ஒப்படைக்கப்பட்டது. (33.41)

# பொங்குதமிழுக்காய் பல்கலை.சமூகம் உழைக்கவேண்டும் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் அறை கூவல்

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த- அதேவேளை இக்கட்டான ஒரு காலகட்டத்தில் தமிழ் மக்களாகிய நாம் வாழ்ந்துகொண்டிருக் கின்றோம். 2001இல் பல்கலைக்கழக சமூகத் தால் முன்னெடுக்கப்பட்ட பொங்குதமிழ் பின்னர் ஈழத்தமிழரின் குரலாக் பரிணமித்து இன்றைய தென்னிலங்கை அரசியல் சூழலில் கொழும்பு ஆட்சியாளர்களுக்கும், சர்வதேச தலைவர்களுக் கும் தமிழ்மக்களின் குரலை உரத்து வெளிப் படுத்த வேண்டிய தேவையுள்ளது என யாழ்.பல் கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மோகன தாஸ் தெரிவித்துள்ளார்.

இந்தப் பொங்குதமிழ் 2005 மிக முக்கியமா னது. எமது மக்கள் பல்கலைக்கழகத்திடம் இருந்து நிறைய எதிர்பார்க்கின்றார்கள். அதற் கேற்ப பொங்குதமிழ் ஏற்பாட்டில் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், நிர்வாக உத்தியோகத் தர்கள் உட்பட அனைவரும் முழுமையான அர்ப்பணிப்புடன் செயலாற்றவேண்டும். பல கலைக்கழக சமுதாயம் தமிழ் சமுதாயத்திற்கு ஆற்றவேண் டிய கடமை பொறுப்பு இதுவாகும். பரந்துபட்ட தமிழ் சமூகத்தை உள்வாங்கும் வகையிலான திட்டமிடலுடன் பொங்கு தமிழுக்காய் பல் கலைக்கழக சமூகம் உழைக்கவேண்டும்.

கடந்த வியாழன் மாலை மூன்று மணிக்கு கைலாசபதி கலையரங்கத்தில் இடம்பெற்ற பல்கலைக்கழக ஆசிரியர், ஊழியர்களுக்கான பொங்குதமிழ் ஆலோசனைக் கூட்டத்திலேயே யாழ்.பல்கலைக்கழகத்துணைவேந்தர் இவ்வாறு தெரிவித்தார்.

மருத்துவ பீடாதிபதி வைத்தியகலாநிதி க.சிவபாலன் உரையாற்றுகையில்; 2002இற்கு முன்னர் வன்னிப்பிரதேசம் முழுவதும் மக்கள் போர்க்கோலம் பூண்டமையால் தான் (ஓயாத அலைகள்) வெற்றி பெற்றது. ஆனால், சர்வதே சத்திற்கு இச்செய்தி சரியாக வெளிப்படுத் தப்படவில்லை என்ற ஆதங்கம் எனக்கு உண்டு. யாழ்ப்பாணத்து நடுத்தரவர்க்கம் போராடாது என்று கூறப்பட்ட காலம் ஒன்று இருந்தது. ஆனால் இராணுவக்கட்டுப்பாட்டின் மத்தியில் குடாநாட்டில் 2001இல் இடம்பெற்ற பொங்கு தமிழ் இதைத் தகர்த்து விட்டது. நாம் செயற்பட வும் வேண்டும். எமது செயற்பாட்டைச் சரியாகச் சொல்லவும் எடுத்துக்கூறவும் வேண்டும். ஊட கங்கள் தமிழ்மக்களுடைய எழுச்சியை சாதாரண சிங்கள மக்களுக்கு எடுத்துச்கூற வேண்டும். தமிழ்மக்களுடைய எழுச்சியை சர்வ தேசம் உணர்ந்த அளவுக்கு சிறிலங்கா அரசுக் கொள்கை வகுப்பாளர்கள் உணர்ந்துகொள்ள வில்லை என்றார்.

நுண்கலைத்துறை தலைவர் கலாநிதி க.சிதம்பரநாதன் உரையாற்றுகையில்; சர்வதேசம் இலங்கையில் இனப்பிரச்சினையை எவ்வகையிலேனும் முடிவுக்குக் கொண்டுவந்து ஒருவெற்றியை ஈட்ட விளைகின்றது. வன் முறைதான் தாம் அடையாளம் காண்கின்ற பிரச்சினை என்கின்றது. பொங்குதமிழ் வன் முறையற்ற முறையில் தமிழ்மக்களின் பிரச் சினையைத் தீர்க்க முனையும் ஒரு பெரும் முயற்சியாகும். சிங்கள மக்களின் உண்மை யான தலைமை தற்போது உருவாகிவிட்ட தாகக் கூறப்படுகின்றது. இத்தலைமை தமிழ் மக்களுக்கு எதையும் வழங்கத் தயாரில்லை என வெளிப்படையாகக் கூறிவிட்டது. இதனால் தனக்கு அமெரிக்காவுக்குப் போக அவமானமாக உள்ளது என சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் வெளிப்படையாகவே கூறியுள்ளார். ஒஸ்லோ நகரில் விடுதலைப்புலிகள் உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வைக் கண்டறியத் தயாராக உள்ளதாகக் கூறியிருக் கின்றனர். ஆனால் சிங்களத்தலைமை எதையும் வழங்கத்தயாராக இல்லை. சுனாமிப் பொதுக் கட்டமைப்பை வழங்க அவர்கள் தயாரில்லை.

இப்பொழுது 2005இல் விடுதலைப்புலி களைச் சமதரப்பாக ஏற்றுக்கொள்ள சிங்களத் தலைமை விரும்பவில்லை. தாம் அரசு, விடு தலைப்புலிகள் ஆயுதக்குழு எனக் கூற விரும் புகின்றது. நாம் அவ்வாறு இல்லையென இப் பொங்குதமிழில் கூறவிரும்புகின்றோம். சிங்களத் தலைமை இத்தீவு முழுவதும் தமக்குச் சொந்தமானது எனக் கூறவிரும்பு கின்றது. நாம் இங்கு இருதேசிய இனங்கள்- இரு அரசுகள் இருப்பதை எடுத்துக்கூற விரும்புகின்றோம். தமிழ் மக்களின் அரசு- தமிழ்மக்களால் தமிழ்மக் களுக்காக உருவாக் கப்பட்ட அரசு-எனவே இது சனநாயக அரசு- இந்த யதார்த்தத்தைச் சிங்களதேசம், சர்வ தேசம் ஏற்றுக்கொள்ளல் அவசியமானது என் றார்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் விஜயரூபன் தலைமையில் இடம் பெற்ற இக்கூட்டத்தில் பல்கலைக்கழக பீடாதி பதிகள், நீதியாளர், பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தலைவர் சி.தங்கராஜா, யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சே.கஜேந்திரன் ஆகியோர் உரையாற்றினர்.

# பெரும் குழப்பத்தின் மத்தியில் மகிந்தராஜபக்ஷவின் பிரச்சாரம்

சிறிலங்காவின் சனாதிபதித் தேர்தலுக்கு ஒரு சில மாதங்களே உள்ள நிலையில் ஆளும் கட்சியான பொதுசன ஐக்கிய முன்னணி பெரும் குழப்பத்தில் ஆழ்ந்து போயுள்ளது. சனாதிபதி வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷ அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் அவருக்கு ஆதரவான பிரச்சார நடவடிக்கைகள் அவருக்குச் சார்பானவர்களால் மட்டுமே முன்னெடுக்கப்பட்டு வருவது அக்கட்சிக்கு பெரும் பலவீனமானதாக உள்ளது.

அதாவது அவரது கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பலர் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவதற்கு இன்னமும் முன்வரவில்லை. அவர்கள் கட்சித்தலைவியான சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் முடிவுக்குக் காத்திருக்கிறார்கள் என்றே சொல்லப்படுகிறது.

ஆனால் சனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பணி ஏற்பாட்டாளர் மங்களசமவீரவின் பணியும், அரச ஊடகங்களின் பணியும் தடையின்றித்



தொடர்வதையே அவதானிக்க முடிகின்றது. இதில் அரச ஊடகங்கள் தமது வழமையான பாணியில் ஆளும் கட்சியின் முக்கிய பிரச்சாரக்காரராகமாறி விட்டிருக்கின்றன. இப்பொழுது அவை மகிந்த ராஜபக்ஷவை இடைவிடாது போற்றிக் கொண்டும் ரணில் விக்கிரமசிங்கவைத் தூற்றிக் கொண்டுமிருக்கின்றன.அதேவேளை தனியார் ஊடகங்கள் ஒருதலைப்பட்சமான பிரச்சாரத்தை மேற்கொள்வதாகவும் கூறுகின்றன.



இவற்றுக்கும் மேலாக மகிந்த ராஜபக்ஷவின் பிரச்சார ஏற்பாட்டாளர் மங்கள சமர வீரவோ 17 ஆவது திருத்தச்சட்ட மூலத்தில் தேர்தல் ஆணையாளருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை முழுமையாகப்பயன்படுத்தி தனியார் ஊடகங்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருக்கிறார்.

இப் 17 ஆவது திருத்தச்சட்டம் கூறும் முக்கியமான விடயம் ஒன்றை அமுல்படுத்தாத அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர் இவ்வாறு கூறுவது நகைப்புக்குரிய விடயம்தான். ஏனெனில் 17 ஆவது திருத்தச் சட்டம் சுயாதீனமான தேர்தல் ஆணைக்குழு ஒன்றை நியமிப்பது பற்றிக்கூறுகிறது அவ்வாறு ஒரு ஆணைக்குழு நியமிக்கப்பட்டால் அந்த ஆணைக்குழு தனக்குரிய முழு அதிகாரங்களையும் பயன்படுத்திக் கொள்ளமுடியும் ஆனால் அவ்வாறானதொரு ஆணைக்குழு நியமிக்கப்படாமைக்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே காரணமாகும். அவரே தேர்தல் ஆணைக் குழுவுக்கு உறுப்பினர்களை நியமிக்காது இழுத்தடித்து வருகின்றார்.

ஆனால் அந்த சுயாதீன ஆணைக் குழுவுக்குரிய அதிகாரம் இப்பொழுது தேர்தல் ஆணையாளருக்கு அரசியலமைப்புச் சட்ட ரீதியாக உள்ளது. அவற்றைப் பயன்படுத்த பதவி நீடிப்பிலும் சுகவீனமுற்ற ஒருவராகவுமுள்ள தேர்தல் ஆணையாளர் முன்வருவதில்லை என்றேகூறப்படுகிறது.

இதேவேளை கடந்த பொதுத்தேர்தலின் போது ஊடகங்களைக் கட்டுப்படுத்த அதாவது நடுநிலையுடன் செயற்படவைக்க அவர் எடுத்த முயற்சி அரச ஊடகங்களின் செயற்பாடுகளாலேயே முறியடிக்கப் பட்டிருக்கின்றது.

மங்கள சமரவீர இதனை மட்டுமல்ல ஜே.வி.பியுடனான கூட்டுக்குறித்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷவுக்கு எழுதிய கடிதத்தைப் பொருட்படுத்தத் தேவையில்லை என்றும் கூறியிருக்கிறார். இந்த ஒப்பந்தம் குறித்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஏற்கனவே விளக்கப் பட்டுள்ளதாகவும் இதில் கட்சி ஒழுங்கு மீறல் ஏதுமில்லை என்றும் கூறியிருக்கிறார்.

ஆனால் இது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியிருப்பதற்கு முற்றிலும் மாறானதாகும். அதாவது இவ் ஒப்பந்தம் குறித்து அரைமணி நேரத்திற்கு முன்னரே தனக்குத் தெரியும் என்றும் கட்சியும் அரசாங்கமும் ஏற்றுக்கொண்ட பொதுக் கட்டமைப்பை நிராகரிக்கும் ஒப்பந்தத்தைச் செய்து கொண்ட மகிந்த ராஜபக்ஷவின் நடவடிக்கை கட்சியின் கொள்கைக்கு மாறானது என்றும் கூறியிருக்கிறார்.

இவ்வாறான நிலையில் சனாதிபதியின் நெருங்கிய ஆலோசகரான மங்கள சமரவீர சனாதிபதி சந்திரிகாவுக்கு எதிராக கூறியுள்ளமையானது, அவர் மகிந்த ராஜபக்ஷவின் பக்கம் சாய்ந்து விட்டாரோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

ஜே.வி.பி யுடனான கூட்டு முறிவடையும் சந்தர்ப்பத்தில் ஜே.வி.பிக்கு ஆதரவான பிரச்சாரத்தில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டியே அமைச்சர் மங்கள சமரவீரவிடமிருந்து ஊடகத்துறை பறிக்கப்பட்டது. இப்பொழுதும்கூட அதாவது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியூயோர்க்கிற்கு புறப்பட முன்னர் ஜே.வி.பிக்கு ஆதரவான சில பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டதாக அரச ஊடகங்கள் மீது சனாதிபதி சந்திரிகா கோபமடைந்திருந்தார்.

எனவே அவர் இலங்கை திரும்பியபின் எடுக்கும் நடவடிக்கை எவ்வாறானதாக இருக்கும் என்பது மகிந்த ராஜபக்ஷ சனாதிபதி வேட்பாளர் பதவியிலிருந்து நீக்கப்படுவதான உச்ச எல்லை வரை செல்லுமா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

அவ்வாறானதொரு கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டால் கட்சியில் பாரதூரமான பிளவு ஏற்படும் என்பதில் சந்தேகம் ஏதுமில்லை. ஆனால் அவ்வாறான தொரு நிலையை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விரும்புவாரா? என்பது சந்தேகமே. ஏனெனில் தமது பரம்பரைச் சொத்தான கட்சியை அவர் உடைக்க விரும்பாமையே மகிந்த ராஜபக்ஷ சனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்டமைக்கு காரணமாகும்.

இதனால் இப் பொழுதும் அவர் அந்த நடவடிக்கையை எடுத்தால் அது மேலும் மோசமான நிலையை ஏற்படுத்தும் அதேவேளை கட்சியின் வெற்றி குறித்து ஓரளவேனும் நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடிய நிலையில் மகிந்தராஜபக்ஷ மட்டுமே இருந்த காரணத்தினாலேயேஅவர் சனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்டார்.

ஆனால் ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றுடன் மகிந்த ராஜபக்ஷ செய்து கொண்ட ஒப்பந்தங்கள் அவருக்கு வெற்றியைத் தேடித்தருகின்றதோ இல்லையோ சர்வதேச ரீதியாக தற்போதைய அரசாங்கத்திற்குப் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

அதாவது அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொதுக்கட்டமைப்பை அதன் பிரதமருடன் நிராகரித்து இனவாதக் கட்சிகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டமை, தற்போதைய சமாதான நடவடிக்கைகளை முற்றுமுழுதாக மறுதலிக்கும் வகையில் இந்த ஒப்பந்தங்களின் அம்சங்கள் அமைந்துள்ளமை போன்றவை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் அரசாங்கத்துக்கும் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

அதுவும் ஐக்கியநாடுகள் சபைக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்கு அவர் புறப்பட விருந்தவேளையில் இந்த ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டமை பெரும் சங்கடத்தை உருவாக்கியது. இதுதொடர்பாக சர்வதேசத் தலைவர்கள், ஊடகங்கள் எழுப்பக்கூடிய கேள்விகளுக்குப் பதிலளிக்கக்கூடிய வகையிலேயே அவர் கடுமையானதொரு கடிதத்தை மகிந்த ராஜபக்ஷவிற்கு எழுதியுள்ளார்.

அதாவது பொதுக்கட்டமைப்பு உட்பட பல்வேறு சமாதான நடவடிக்கைகளைத் தான் முன்னெடுப்பதற்கு ஜே.வி.பி முட்டுக்கட்டையாக இருந்தது போலவும் தனது ஆட்சி பறிபோனாலும் தான் நேர்மையாகவும் நீதியாகவும் நடந்துகொள்வதுபோலவும் காட்ட பொதுக்கட்டமைப்பிற்கு உடன்பட்ட அவர் பின்னர் நீதிமன்றம் மூலம் செயலிழக்கச் செய்தார்.

இப்பொழுது மகிந்த ராஜபக்ஷவே ஜே.வி.பி யுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது போலவும் கட்சிக் கொள்கைக்கும் தனது கொள்கைக்கும் அது புறம்பானது என்பது போலவும் நியூயோர்க் மாநாடு முடிந்ததும் மகிந்த ராஜபக்ஷ மீது நடவடிக்கை எடுக்கப் போவது போலவும் காட்டி வருகிறார்.

அதேபோல ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டவேளை மகிந்த ராஜபக்ஷவுக்கு அருகிலேயே இருந்த வெளிவிவகார அமைச்சர் அநுராபண்டாரநாயக்கவும் கட்சிக் கொள்கை பற்றியும், நடவடிக்கை பற்றியும், நியூயோர்க்கில் இருந்துகொண்டு கூறி வருகின்றார்.

ஆனால் இவர்கள் சிறிலங்காவுக்குத் திரும்பியதும் மகிந்த ராஜபக்ஷ மீது திருப்பு முனையை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் எதனையும் எடுப்பார்களா? என்பது சந்தேகமே.

ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தேர்தல் பிரச்சாரப் பணிகளில் ஈடுபடாது விலகிக்கொள்ளக்கூடும். இது கட்சி ஆதரவாளர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தி மகிந்த ராஜபக்ஷவிற்கு இடையூறை ஏற்படுத்தக்கூடும். அவ்வாறான நிலையைச் சந்திரிகா விரும்பவும் கூடும்.

ஏனெனில் மகிந்த ராஜபக்ஷ மீது குற்றம்



சுமத்த அவருக்கு வலுவான காரணம் கிடைத்திருக்கிறது. இக்குற்றச்சாட்டை மேலும் வலுவுள்ளதாக்கி மகிந்த ராஜபக்ஷவை ஓரம்கட்டி அநுராவை முன்னிலைக்கு கொண்டு வருவதற்கு இது உதவியாக இருக்கும்.

இப்பொழுது மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக அவரது கட்சியினரைவிட ஜே.வி.பியினரே பிரச்சாரம் செய்து வருகின்றனர்.



இதுவும் அவருக்குப் பாதகமாக அமையக் கூடியது என்று தென்பகுதிச் செய்திகள் தெரிவிக்கின்றன. அதாவது ஜே.வி.பி யின் பிரச்சாரம் சமாதானத்தை உண்மையாக விரும்பும் தென்பகுதி மக்களுக்கும் சிறுபான்மையின மக்களுக்கும் எரிச்சலையூட்டி வருவதாக அவர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை ஜாதிக ஹெல உறுமய

**— வேலவன்**

மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான பிரச்சாரத்தில் இன்னமும் ஈடுபடவில்லை என்றும் ஏனெனில் தம்முடனான ஒப்பந்த விதிகள் ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெற்ற பின்னரே பிரச்சாரத்தில் ஈடுபடப் போவதாகவும் கூறிவருகிறது. இது எவ்வளவு தூரம் சாத்தியமாகும் என்பதையும் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

இக்குழப்பங்கள் எல்லாம் சு.க. சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவிற்கு பிரச்சார முன்னெடுப்புகளுக்கு பெரும் முட்டுக்கட்டைகளாக இருந்து வருகின்றன.

# வவு. வடக்கின் கல்விப்பின்னடைவு நிலை பிரதேசத்தின் அபிவிருத்தியைப் பாதிக்கும்

## வவு. வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் தண்டாயுதபாணி தெரிவிப்பு

(செட்டிகுளம்)

**ஒரு பிரதேசத்தின் சமூக பொருளாதார பண்பாட்டு அரசியல் வளர்ச்சிக்கான அடிப்படை காரணியாக கல்வி அமைகிறது என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் ஒருவிடயம். சமூக பொருளாதார பண்பாட்டு நிலைமைகளும் கல்விக்கும் இடையே உடன்பாடான ஒரு இணைவு காணப்படுகிறது. அவ்வகையில் நோக்கும் இடத்து வவுனியா வடக்கு பிரதேசத்தின் இன்றைய கல்வி பின்னடைவு நிலைமை நீண்டகால நோக்கில் இப்பிரதேசத்தின் சமூக பொருளாதார அபிவிருத்தியை பாதிக்கும் என்பது அவசரமாக உணர்ந்து கொள்ளப்பட வேண்டிய ஓர் உண்மையாகும். இதனை அவசரமாக அக்கறை கொண்ட அனைத்து தரப்பினரும் உணர்ந்து கொண்டு உடனடியாக சேவையாற்ற வேண்டிய நிலைமை ஒன்று ஏற்பட்டுள்ளது என்று வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் சி.தண்டாயுதபாணி தெரிவித்துள்ளார்.**

வவுனியா வடக்கு வலயத்தில் நேற்று முன்தினம் காலை 9.00 மணிக்கு ஆரம்பமான கல்வி மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இன்றைய கல்வி நிலவரம் பற்றிய கருத்தாடலும் கல்வி விருத்திக்கான மூலோபாயங்களைத் தேடலும் முக்கிய தொனிப் பொருளாக கொள்ளப்பட்டு முக்கியமாக தெரிவு செய்யப்பட்ட பத்து தலைப்புகளை மையமாக வைத்து ஆய்வு செய்யப்பட்ட இந்த நிகழ்வானது வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடை பெற்றது. இந்த மாநாட்டில் பல பேராளர்கள் கலந்து கொண்டுள்ளனர். நேற்று முன்தினம் ஆரம்ப நிகழ்வில் வடகிழக்கு கல்விப் பணிப்பாளர் எஸ். விசாகலிங்கம் உட்பட அதிகாரி களும் வன்னி பாராளுமன்ற உறுப் பினர்களான சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோர், பேராளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வினை வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் சி. தண்டாயுதபாணி தலைமை ஏற்று உரையாற்றும் போது மேலும் அவர் தெரிவிக்கையில்; இராணுவ நடவடிக்கையின் போது இந்த வலயத்தின் அனைத்து வளங்களும் அழிக்கப்பட்டுள்ள நிலையில் மீண்டும் இதனைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. வவுனியா வடக்கு வலயத்தில் நெடுங்கேணி கோட்டம், ஓமந்தை கோட்டம் ஆகிய இரண்டு கோட்டங் கள் உள்ளன. இந்த நெடுங்கேணிக் கோட்டத்தில் 42 பாடசாலைகளும் ஓமந்தை கோட்டத்தில் 47 பாட சாலைகளும் உள்ளன. இவற்றில் 63 பாடசாலைகளே தமது சொந்த இடங்களில் இயங்கி வருகின்றன. ஏனைய 26 பாடசாலைகள் அமைந் துள்ள பெருமளவான பகுதிகள் இராணுவத்தினரின் அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசம் என்பது குறிப்பிடத்தக்கது. போரின் போது 89 பாடசாலைகளில் 88 பாடசாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன இந்த நிலையில் பாடசாலைகளின் வளப் பற்றாக்குறை, கட்டடப் பற்றாக்குறை, ஆசிரியர் பற்றாக்குறை போக்குவரத் துப் பிரச்சினை போன்ற அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிலை இருக்கின்றது. வவுனியா வடக்கு போரின் அனர்த் தங்களை அதிகமாக சுமந்து கொண்ட ஒரு பிரதேசமாகும். இந்த அனர்த்தம் காரணமாக இப்பகுதி மக்களின் சமூக பொருளாதார கட்டுமானங்கள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. கல்வி அதை யும் விட மோசமாக பாதிக்கப்பட்டுள் ளது. கல்வி தொடர்பாக பல்வேறு இடர்கள் எதிர் நோக்கப்படுகின்றன. இதன் காரணமாக வவுனியா வடக்கு வலயத்தின் கல்வி முற்றாகவே பாதிப்படைத்திருந்தது. இப்போ தும் அதன் நிலை தொடர்ந்து கொண்டுள்ளது என்பது அனைவரும் சிந்திக்க வேண்டிய ஒன்று. இதன் பின்னணி தொடர்பாகவும் இந்தக் கல்வியை விருத்தி செய்வது தொடர் பாகவும் ஆராய்வதற்காகவே இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ளோம். இந்த ஆய்வுகளில் பல உண்மைகள் வெளிவந்து எதிர்காலத்தில் எமது பணியை வீரியமாக முன்னெடுத்து செல்வதற்கு உந்து சக்தியாக அமையும் என்றும் தெரிவித்தார். (21)

# குண்டுத் தாக்குதல்

பொலன்னறுவை மாவட்டம் திம்புலாகல பிரதேசசபைத் தலைவர் சனத்குமாரகுலதுங்கவின் (ஐ.தே.க) இல்லம் மீது கடந்த வியாழன் இரவு இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

செவனப்பிட்டியவிலுள்ள அவரது இல்லம் மீது இரவு 10.00 மணியளவில் உந்துருளியில் வந்த நபர்களினால் இந்தக் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வீட்டிற்கு முன்பாக நிறுத்தப் பட்டிருந்த வாகனமும் வீட்டின் முன்பகுதியும் சேதமடைந்துள்ளன.

# பாதாள உலகக் குழுத் தலைவர் கொலை 3 சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பணி நீக்கம்

(கொழும்பு)

புதுக்கடை நீதிமன்றத்திற்கு அருகில் பாதாள உலகக் குழுத் தலைவரைக் கொலை செய்த சம்ப வம் தொடர்பாக மூன்று சிறைச் சாலை உத்தியோகத்தர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்தவாரம் விசாரணை முடிந்து சிறைக்குத் திரும்ப இருந்த போது சிறைச்சாலை பேருந்துக் குள்ளேயே பாதாள உலகக் குழுவின் தலைவரான ரிஸ்வான் சுட்டுக் கொல்லப்பட்டார். பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த தனுங்க என்பவரி னால் ரிஸ்வான் சுட்டுக்கொல்லப் பட்டார்.

இச்சம்பவத்தின்போது தமது கடமையினை சரிவர ஆற்றவில்லை என்ற குற்றச்சாட்டிற்கமைய மூன்று சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பணி நீக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

இம்மூவரின் செயற்பாட்டினா லேயே துப்பாக்கியொன்றைச் சிறைச்சாலை பேருந்துக்குள் கொண்டு வருவதற்கு வாய்ப்பு ஏற்பட்டதாக சிறைச்சாலை தலை மைய அத்தியட்சகர் எம்.ஜி. சரத் சந்திரவினால் சமர்ப்பிக்கப்பட்ட விசாரணை அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# சனாதிபதித் தேர்தல் குறித்து அறிவிப்பு எதிர்வரும் 29 இற்குள் வெளியாகும்

சனாதிபதித் தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு 29 ஆம் திகதிக்கு முன் வெளியிடப்படும் எனத் தெரியவருகிறது. சனாதிப தியின் பதவிக்காலம் டிசம்பர் மாதம் 22 ஆம் திகதியுடன் முடிவடை வதைக் கவனத்தில் கொண்டு புதிய சனாதிபதித் தேர்தலை நடத்தவத னால் தற்போதைய தேர்தல் சட்டத் தின் படி தேர்தலுக்கான வர்த்தமானி அறிவிப்பு இம்மாதம் 29 ஆம் திகதிக்கு முன்னதாக வெளியிடப்பட வேண்டும் என்று தேர்தல் திணைக் கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தேர்தல் சட்ட விதிகளின்படி வர்த்த மானி அறிவித்தல் வெளியிடப்பட்ட பின்னர் 30 நாட்களுக்குள் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்படல் வேண்டும். நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு 30 நாட்களுக்குக் குறையாததும், 60 நாட்களுக்கு மேற் படாததுமான காலப்பகுதியில் தேர்தல் நடத்தப்படல் வேண்டும். இதனடிப் படையிலேயே வர்த்தமானி அறி விப்பு எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (32)

# கல்லூரி மாணவர்கள் தொடர்பான சட்டத்தில் திருத்தம் தேவை

## —— கல்விசார் தொழில் தொழிற்சங்கம் வலியுறுத்து

1995 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க கல்லூரி மாணவர்கள் தொடர்பான சட்ட மூலத்தில் சில மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டுமென கல்விசார் தொழில் தொழிற்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தடுக்கும் நோக்கி லேயே மாணவர்கள் ஆசிரியர்களால் தண்டிக்கப்படுவ்தாக சங்கத்தின் செயலாளர் வசந்த தர்மசிறி தெரிவித்தார்.மாணவர்களைத் தண்டித்தார்கள் என்ற காரணத்திற் காக டீ.எஸ்.சேனநாயக்கா கல்லூரி யின் இரண்டு ஆசிரியர்கள் நீதிமன்றத்தினால் தண்டனைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் கல்வித் துறையில் சர்ச்சையை எழுப்பியுள்ள தாகவும் அவர் தெரிவித்தார்.எப்படி யிருந்த பொழுதிலும் நீதிமன்றத்தின் தீர்ப்புக் குறித்து நாம் விமர்சிக்க வில்லை எனவும் அவர் தெரிவித்தார். இந்த விடயம் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள இலங்கை ஆசிரியர் சங்கம், சமூகத்தில் காணப் படும் பலவீனங்கள் பாடசாலை களிலும் காணப்படுவதாக தெரிவித் துள்ளது. எனவே பாடசாலைகளில் மட்டும் ஒழுக்கத்தை ஏற்படுத்துவது கடினமான விடயம் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (32)

# பொதுக்கட்டமைப்பு நியாயமற்றதாக உள்ளதால் அதற்கு நான் ஆதரவு வழங்கத்தயாரில்லை

## - சிறிலங்காப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பொதுக்கட்டமைப்பு நேர்மையானதா கக் காணப்படாததனாலேயே அதற்கு தான் ஒத்துழைப்பு வழங்கவில்லை எனவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதன் மூலம் நியாயமான தீர்வு கிட்டப் போவதில்லை என்பதை ஆரம்பத்திலிருந்தே தான் உணர்ந்து கொண்டதாகவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தன்னைச் சந்திக்க வந்த முஸ்லிம் தூதுக்குழு ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்களைப் பாதிக்கும் எந்தவொரு செயற்பாடுகளுக்கும் தான் துணை நிற்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புனித ரம்ழான் நோன்பு காலத் தில் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயும் கூட்டம் அலரி மாளிகையில் நடை பெற்ற போதே பிரதமர் மகிந்த ராஜ பக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது;

சமாதான முன்னெடுப்புகளில் முஸ்லிம் சமூகத்தைப் புறக்கணித்து எத்தகைய முடிவும் எடுக்கப்பட தான் இடமளிக்கப்போவதில்லை எனவும், முஸ்லிம்களுக்காக கடந்த காலத் தைப் போன்றே தனது ஆதரவும் ஒத்து ழைப்பும் எதிர்காலத்திலும் உண்டு எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் பிணையில் விடுதலை

(கொழும்பு)

சிறிலங்காவின் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக்க சில்வா பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

போதைப் பொருள் தடுப்புப் பொலிசார் இருவரைத் தாக்கிய வழக்கில் மேர்வின் சில்வாவின் மகன் மாலக்க சில்வா, மேர்வின் சில்வா வின் வாகன ஓட்டுநர் சம்பத்ராஜ பக்ஷ ஆகியோர் கைது செய்யப் பட்டனர்.

இந்த வழக்கில் மாலக்க சில்வா பிணை கோரி தாக்கல் செய்த மனு மீது கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி ரோகினி நாணயக்கார கடந்த வியாழன் விசாரணை நடத்தினார்.

விசாரணை முடிவில் ஐம்ப தாயிரம் ரூபாவுக்கான பிணைத் தொகை யைச் செலுத்தி குற்றம் சாட்டப்பட்ட இருவரது கைரேகைகள் பதிவு செய்து கொள்ளப்பட்ட பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

சட்டத்தரணிகள் பிரசாத் சில்வா மற்றும் லக்ஷ்மன் ரணசிங்க ஆகியோர் குற்றம் சாட்டப்பட்டோருக் காக வாதிட்டனர். வழக்கின் அடுத்த கட்ட விசாரணை ஒக்ரோபர் ஏழாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# சு.க.வின் கொள்கைக்கு முரண்படாவிட்டால் மகிந்தவுக்கு ஆதரவு வழங்குவேன்

## —— அநுரா பண்டாரநாயக்க தெரிவிப்பு

பிரதமர் மகிந்தராஜபக்ஷ ஏனைய கட்சிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் சிறிலங்கா சுதந்தி ரக் கட்சியின் கொள்கை மற்றும் கோட்பாடுகளுடன் முரண்படா விட்டால் தான் தனது முழுமையான ஆதரவை மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்குவதோடு, அவருக்காக சனாதிபதித் தேர்தலில் முழுமூச்சுடன் பிரச்சாரம் செய்வதாகவும் வெளியுறவு அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார். சனாதிபதித் தேர்தலில் பிரதமருக்கு தான் ஆதரவு அளிக்கப் போவதில்லை என ஊடகங்களில் வெளிவந்த செய்திகள் குறித்து நியூயோர்க் சென்றுள்ள தான் கவனத்தில் எடுத்திருப்பதா கவும் அது குறித்து சனாதிபதியுடன் கலந்துரையாடி இருப்பதாகவும் தெரிவித்த அவர், பிரதமர் மேற்கொண்ட உடன்படிக்கைகளை சிறிலங்கா சுதந்திரக்கட்சி மிகவும் தீவிரமாக ஆராய்ந்து அவை கட்சியினதும் அங் கத்தவர்களினதும் இணக்கத்தைப் பெற்றால் தமது முழுமையான ஆதரவு பிரதமர் மகிந்தராஜபக்ஷவுக்கு வழங்கப்படும் எனவும் வெளியுறவு அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார். (32)

# என் பெயருக்கு களங்கம் விளைவிக்க லஞ்ச ஊழல் பணிப்பாளர் முயற்சி

## - எஸ்.பி.திசாநாயக்க முறையீடு

என் அரசியல் வாழ்விற்கும் நற்பெயருக்கும் களங்கம் ஏற்படுத்தும் வகையில் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருக்கிறார் என்று முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திசநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

மேன்முறையீடு நீதிமன்றத்திற்கு திசாநாயக்க தாக்கல் செய்த அறிக்கையில் இதைத் தெரிவித்துள்ளார்.

லஞ்ச ஊழல் வழக்கிலிருந்து எஸ்.பி.திசாநாயக்கவை விடுதலை செய்து மேல்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை இரத்துச் செய்யுமாறும், அந்த வழக்கை மீண்டும் விசாரணைக்கெடுக்கமாறும் கோரி லஞ்ச ஊழல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

1994 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதிமுதல் 2001 டிசம்பர் 30 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியினுள் தனது வருவாய்க்கு மேற்பட்ட சொத்துக்களை சேர்த்துள்ளார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கவிற்கு எதிராக மேல்நீதிமன்றத்தில் லஞ்ச ஊழல் ஆணைக்குழு வழக்குத் தொடர்ந்திருந்தது.

# கொழும்பில் தமிழர்களுக்கு பொலிஸ் பதிவு; அநாகரிகச் செயலென மனோகணேசன் கண்டனம்

கொழும்பில் மீண்டும் பொலிஸ் நிலையங்களில் தமிழர்கள் பதிவு செய்யப்படும் நடைமுறையை மேல் மாகாண மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கண்டித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் பதில் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

கொழும்பின் சில பொலிஸ் நிலையங்கள் மூலம் தமிழர்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

அவற்றை நிரப்பிக் கொடுக்க வேண்டாமென தாம் தமிழ் மக்களைக் கேட்டுள்ளதாகவும் மனோ கணேசன் பதில் பாதுகாப்பு அமைச்சரிடம் தெரிவித்துள்ளார். தம்மைப் பொறுத்த வரையில் பொலிசாரால் பெறப்படும் தகவல்கள் எதிர்காலத்தில் தமிழர்களின் தனிப்பட்ட வாழ்க்கையில் தலையிடும் வாய்ப்பை வழங்கிவிடும் என அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்களுக்காக சந்தேகிக்கப்படுபவர்களை விசாரணைக்கு உட்படுத்தலாம். ஆனால் அதற்காகச் தமிழர்கள் யாவரும் தம்மைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் எனக் கூறுவது அநாகரிகச் செயலாகும்.

இதேவேளை இந்தியா, பிரித்தானியா ஆகிய நாடுகளில் இலங்கையைப் போன்ற பிரச்சினைகள் காணப்படுகின்றன.

எனினும் அங்கு இவ்வாறான பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை என மனோ கணேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.


## வயல் காணி விற்பனைக் குண்டு

முரசு மோட்டைக்காடு, பரந்தனில் (3ஆம் வாய்க் கால்)13 ¾ ஏக்கர் நல்ல விளைச்சல் உள்ள வயல் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
Mrs. P.Vijayaratnam,
Miss S.Pooranachandran,
No. 124 Rasavin Thoddam Rd,
Nallur
T.No 0214590853.
T.No 222 3088.

(6709)


# சிறில. முப்படைத் தளபதியுடன் கடற்படைத் தளபதி சந்திப்பு

சிறிலங்காவின் முப்படைத் தளபதி தயா சந்தகிரியை புதிய கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட கடந்த வியாழன் சந்தித்துப் பேசினார்.

சிறிலங்கா கடற்படையின் 15 ஆவது தளபதியாக வசந்த கரன்னகொட செப்ரெம்பர் முதலாம்திகதி பதவியேற்றார்.

இதையடுத்து முப்படைத் தளபதிகளை அவர் சந்தித்தார்.

தயா சந்தகிரியுடனான சந்திப்பு கொழும்பிலுள்ள கூட்டுப்படைத் தலைமையகத்தில் நடைபெற்றது.

பின்னர் விமானப்படைத் தளபதி ஏயர்மார்சல் டொனால்ட் பெரேராவையும் வசந்த கரன்னகொட சந்தித்துப் பேசினார.

இச்சந்திப்பின்போது விமானப் படையினரின் அணிவகுப்பு மரியாதையை வசந்த கரன்னகொட ஏற்றுக் கொண்டார். கொழும்பு விமானப்படை தலைமையகத்தில் இரு தளபதிகளும் சந்தித்துப் பேசினர்.

அதன்பின்னர் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொடவையும் இராணுவ தலைமையகத்தில் வசந்த கரன்னகொட சந்தித்துப் பேசினார்.புதிய கடற்படைத் தளபதிக்கு மூத்த இராணுவ அதிகாரிகள் வாழ்த்துத் தெரிவித்தனர்.


## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

### நடத்துநர் பணிக்கான நேர்முகத்தேர்வு

**சம்பளத்திட்டம்:-**

$$\frac{4430-5530}{10x110}$$ + 2700.00 =7,130.00 + *சிறப்புக் கொடுப்பனவு* 2,300.00=9,430.00

மேற்படி சம்பளத்திட்டத்தில் நடத்துநர் பணிக்கு விண்ணப்பம் செலுத்தியவர்களுக்கான நேர்முகத்தேர்வு 19.09.2005 ஆம் நாள் திங்கள் காலை 09.00 மணி தொடக்கம் பகல் 01.00 மணிவரை விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகில் உள்ள பணிமனையில் நடைபெறும்.

மேற்படி பணிக்கு விண்ணப்பம் செய்தோர் கல்வித்தகைமை. அகவை ஆகியவற்றினை உறுதிப்படுத்தும் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

குறிப்பு:-
இப்பணிக்கு இணைய விரும்புவோர் இந்நாளில் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப் போக்குவரவுக்கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி-12824)



உருத்திரபுரம் ம.வி. மாணவியை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் எமது பாடசாலை மாணவி செல்வி. றமணன் வித்யா வர்த்தகப் பிரிவில் (3A) அதிவிசேட சித்திபெற்று மாவட்ட மட்டத்தில் 3ஆம் நிலையையும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். உருத்திரபுரம் ம.வி.யில் வர்த்தகப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இம்முறையே அதிவிசேட சித்தியை இம்மாணவிபெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

பாடசாலை சமூகம்,
உருத்திரபுரம் ம.வி.,

(6411)



வட,கிழக்கு வன்றொழினுட்ப மேம்பாட்டு நிறுவனம்
Noth,East Mechanical Develepment organization.

## பணியாளர்களுக்கான அழைப்பு

*எமது நிறுவனத்தால் பணிக்குத் தெரிவானோர்க்கான பணி 2005.09.21 அன்று ஆரம்பமாகவுள்ளதால் பணிக்குத் தெரிவு செய்யப்பட்டோர் அனைவரும் நேர்முகம் கண்ட இடத்திற்கு 2005.09.20 அன்று காலை 10.00 மணிக்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.*

பணிப்பாளர்
வட,கிழக்கு,
வன்றொழினுட்ப மேம்பாட்டு நிறுவனம்.

(6700)



## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

### கிளிநொச்சி - புதுக்குடியிருப்பு பணிநேர மாற்றம்

மேற்படி பேருந்துப்பணி அரச பணியாளர்களின் வேண்டுகைக்கு அமைவாக 22.09.2005ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றேன்.

**கிளிநொச்சி~புதுக்குடியிருப்பு**

நேர ஒழுங்கு

| | கிளிநொச்சி | பரந்தன் | விசுவமடு | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|---|
| காலை | 6.30 | 6.50 | 7.35 | 8.20 |

**புதுக்குடியிருப்பு~கிளிநொச்சி**

நேர ஒழுங்கு

| | புதுக்குடியிருப்பு | விசுவமடு | பரந்தன் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| மாலை | 5.30 | 6.15 | 7.00 | 7.20 |

(சி.12825)

முகாமையாளர்,
பேருந்துப்பகுதி,
கிளிநொச்சி.

# ஒருவாரகாலப் பயணத்தை முடித்து மன்மோகன் சிங் நாடு திரும்பினார்

இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங் பிரான்சிலும்,அமரிக்காவிலும் ஒரு வாரகால பயணத்தை முடித்துக்கொண்டு நேற்று டில்லி சென்றடைந்தார். இவ்விஜயத்தின்போது பிரதமர் மன்மோகன்சிங் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் பிரான்ஸ் அதிபர் ஜக்சிராக், பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ்முஷாரப் ரஷ்ய அதிபர் விளாடிமிர்புட்டின், சீன அதிபர் ஆகியோரைச் சந்தித்து இருதரப்பு உறவு, இராணுவ ஒத்துழைப்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து பேச்சு நடத்தியிருந்தார்.

# நான் விரும்பியிருப்பின் 25 வயதிலேயே இந்தியாவின் பிரதமர் ஆகியிருப்பேன்!

**- ராகுல் காந்தி**

25 வயதிலேயே பிரதமர் ஆகியிருப்பேன். ஆனால் அனுபவம் இல்லாமல் அதை ஏற்கமறுத்துவிட்டேன் என்று ராகுல் காந்தி கூறியுள்ளார்.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் மகன்ராகுல்காந்தி டெஹல்கா இதழுக்கு பேட்டி அளித்தபோதே அவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது;

நான் விரும்பியிருந்தால் 25 வயதிலேயே என்னால் பிரதமர் ஆகியிருக்க முடியும். ஆனால் அது போன்ற வழிகளில் அரசியல் செய்வதில்லை என நான் முடிவு செய்துவிட்டேன். கட்சியில் மூத்தவர்களைப் பார்த்து சத்தம்போட நான் விரும்பவில்லை.

காங்கிரஸ் கட்சியில் நடக்கும் ஒருசில காரியங்கள் எனக்கு ஏமாற்றம் அளிப்பதாக இருக்கிறது.தோற்றுவிடுவோம் என்ற பயம் கொண்டவர்கள் என்னைச் சூழ்ந்து உள்ளனர். கட்சித் தலைவர்களிடம் துணிவும், புதிய சிந்தனைகளும் இல்லாதது எனக்கு அதிர்ச்சி அளிக்கிறது. பழுத்த அரசியல் வாதியாக என்னைத்தகுதி உயர்த்திக்கொள்ள ஒன்றிரண்டு தேர்தல் தோல்விகளையும் சந்திக்கத் தயாராக இருக்கிறேன். அதற்காக என்னை தயார்படுத்தி வருகிறேன்.

எப்போதும் நினைப்பது போல் நடக்காது என்பதைப்புரிந்து வைத்துள்ளேன் எனக்கு எதிராக ஒருசில காரியங்கள் நடந்தாலும் அதனை எதிர்கொள்ள என்னை தயார்படுத்திவருகிறேன்.

நான் வெளிப்படையாக பழகுவதில்லை எனவும், வெட்கப்படுகிறேன் என்றும் என்மீது குற்றம் சாட்டப்படுகிறது. அடக்கி வாசிப்பது உண்மைதான். அதற்காக நான் தயக்கம் காட்டுபவன் அல்ல. இயல்பாக எல்லோரிடமும் நான் கலகலப்பாக பேசுவேன்.மற்றவர்களைப்போல் அரசியல் செய்ய நான் விரும்பவில்லை. என் வழி தனி வழி எனக்கென்று தனியாக சிந்தனை உள்ளது. அரசியலில் என்ன செய்யவேண்டும். அதை எப்படிச் செய்யவேண்டும் என்பதில் தெளிவாக உள்ளேன்.

எனக்கு பிடிவாதம் அதிகம். ஒரு விஷயத்தை நான் செய்வதில்லை என முடிவு செய்துவிட்டால் அதனை 100 முறை எனது தாய் சொன்னாலும் செய்யமாட்டேன். எனது சகோதரி சொன்னாலும் கேட்க மாட்டேன். காரிய கமிட்டி உறுப்பினர் பதவி என்னைப் பொறுத்தவரை ஒரு தர்மசங்கடம்.அந்தப்பதவியில் இருந்து கொண்டு பிரதமரையோ, மூத்த மந்திரியையோ பார்த்து அதை செய்யாதீகள். இதைச் செய்யாதீர்கள் என்று சொல்ல முடியாதென கூறியுள்ளார்




அருள்மிகு

## யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் தேவஸ்தானம்-யோகபுரம்

## வியாழக்கிரகம் இராசி மாற்ற தோஷநிவாரண ஹோம சாந்தி பூசை

**அன்புடையீர்!**

**எதிர்வரும் 19.09.2005 ஆவணி மாதம் 3ஆம் திகதி வியாழபகவான் கன்னி ராசியில் இருந்து துலாம் இராசியில் பிரவேசிப்பதால் எமது நாட்டிற்கும் மக்களுக்கும் ஏற்படும்தீய பலன்கள் விலகி நல் அருள் பெறும் படியும் எமது சிவன் ஆலயத்தில் அன்றைய தினம் காலை 9.00மணிக்கு உத்தமசிவாச்சாரியார்கள் பலரும் சேர்ந்து மகா ஹோம சாந்தி பூசைகள் நடைபெற திருவருள் கூடியுள்ளதால் அனைத்து மக்களும் இவ்வழிபாட்டில் கலந்து கொண்டு தங்களுக்குண்டான நவக்கிரகங்களால் ஏற்படும் வியாழ தோஷம், நாகதோஷம், செவ்வாய் தோஷம், சனீஸ்வரன் மற்றும் பாவக்கிரகதோஷங்கள் யாவற்றுக்கும் தோஷ நிவாரணம் செய்வித்து வியாழபகவானின் காப்பு நூல் அணிந்து சுகவாழ்வு பெற்று உய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.**

## தோஷ பலன் பெறும் இராசிகள் விபரம்

***வியாழபகவான்துலாம் இராசியில் சஞ்சரிக்கும் ஒருவருஷகாலபலன்***

**துலாம் :- இராசியில் பிறந்தவர்களுக்கு பொருள் அழிவு இனசன விரோதம் பகை**
**விருட்சிகம்:- பிராணபயம், சோகம், நோய், துன்பம்**
**மகரம் :-இடம்பிரிவு, நஷ்டம், துக்கம், அலைச்சல்**
**மீனம் :- மரணவியா கூலம், தேக சுகக்குறைவு, சமூக விரோதம் பங்கம்**
**இடபம் :- துயரம், விரோதம், பகைவரால் சஞ்சலம், பொருள் களவு போதல்**
**கடகம் :- சிநேக விரோதம், பிரயாண அலைச்சல்**
**சிங்கம் :- வியாதி, பொருள் நஷ்டம், செய்தொழில் விருத்தியின்மை**

**மேற்படி இராசிகளில் பிறந்தவர்கள் தோஷ நிவர்த்தி செய்வித்து காப்பு நூல் அணிந்து கொள்வதால் தீய பலன்கள் விலகி நன்மையுண்டாகும். மேலும் விபரங்களை யோகபுரம் சிவாலய கருமபீடத்தில் தொடர்பு கொண்டு அறிந்துகொள்ளவும்.**

இங்ஙனம்
சிவப்பணியிலுள்ள
ஆலய பரிபாலன சபையினர்.

(சி-12857)



**FORUT** *Campaign for Development & Solidarity*

AN ORGANISATION PROMOTING ALCOHOL, DRUG,AND SMOKE FREE ENVIRONMENT

VACANCY ANNOUNCEMENT: ENGINEER/TECHNICAL OFFICER (civil)

**FORUT,** an international NGO working in Sri Lanka since 1982, is inviting application from qualified and experienced personnel to work with the poor and affected population to uplift their living standard, by adopting participatory working methods. The candidates are expected to be team workers who could work with the project teams to increase the efficiency and effectiveness.

| Minimum Requirement | Main Tasks and Responsibilities |
|---|---|
| • An Engineering Degree in related field with minimum of 3 years experience, or<br>• National Diploma in Technology (NDT) - Civil, with five year experience in construction works, and<br>• Proven skills in English and Tamil, Knowledge of Sinhala would be desired<br>• Very good Computer literacy,<br>• Valid Driving License, at least for Motor bicycle. | • Prepare plans, drawings and estimates for cons truction and renovation works,<br>• Prepare documents for tenders, evaluate and give recommendation,<br>• Inspect and supervise project implementation at sites and provide technical guidance and advice to ensure quality and timely execution of projects.<br>• Check quantities in bills submitted by partner organization and attend to certification of same.<br>• Prepare procurement plans for infrastructure projects.<br>• Continuously assess the construction and renovation works to determine whether the results serve the indented purposes. |

**Qualified females are encouraged to apply.** Duration of contract will be one year with possible extensions. **Only short listed candidates will be called for interview.** Completed application should be forwarded to reach **program Manager, FORUT Vanni, 155th mile post, Jaffna - Kandy Road, Kilinochchi on or before 03.10.2005**

E-mail:- arne @forut.lk

(சி-12823)


# 60கிலோமீற்றர் தூரத்தை ஓடி மூன்று வயது சிறுவன் சாதனை

ஒரிசாவில் 60 கி.மீ.தூரத்தை ஓய்வின்றி ஓடி கின்னஸ் சாதனைக்காக காத்திருக்கிறான் மூன்று வயது சிறுவன்.

புவனேஸ்வரின் புறநகர குடிசைப் பகுதியைச் சேர்ந்த மூன்று வயது குழந்தை புதியா, தந்தையை இழந்து மூன்று சகோதரிகளுடன் விதவைத் தாயிடம் பசியில் வாடினான் இதைக் கண்ட ஒரிசா ஜூடோ சங்க செயலர் பிரான்ஜிதாஸ் என்பவர் புதியாவை தனது பொறுப்பில் வைத்து வளர்க்கிறார். நல்ல உணவு சாப்பிடக்கிடைத்ததும் சோம்பேறியாக இல்லாத புதியா தினமும் காலை, மாலையில் தானாகவே ஏழு மணி நேர ஓட்டப்பயிற்சியில் இறங்கினான்.

சில மாதங்களிலேயே சாதனைகள் படைக்கத் தயாராகிவிட்டான். பத்து மணி நேரத்தில் தொடர்ந்து ஓடி 48 கி.மீ.தூரத்தை புதியா கடந்து விடுவதாக அவனை வளர்க்கும் பிரான்ஜிதாஸ் கூறினார். 52 கி.மீ.தூரத்தை ஓய்வின்றி ஓடிக்கடந்த 8 வயது சிறுவனது பெயர் கின்னசில் இப்போது சாதனையாக இடம்பெற்றுள்ளது. இதை முறியடித்து 90 கி.மீ.தூரத்தை ஓய்வின்றி ஓடிக்கடக்க புதியா தயாராகி வருகிறான்.

ஏற்கனவே பூரி முதல் புவனேஸ்வர் வரை 60 கி.மீ.தூரத்துக்கு ஓடி முடித்து கின்னஸ் சாதனையை முறியடித்துவிட்டாலும்,பூரி-கட்டாக் இடையேயான 90கி.மீ தூரத்துக்கு தொடர்ந்து ஓடிய பிறகே கின்னஸ் சாதனைக்கு விண்ணப்பிக்கப்போவதாக மழலைக்குரலில் தெளிவாகக்கூறுகிறான் முன்றே வயதான புதியா!

# மகளிருக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு கோரி தி.மு.க. மகளிர் அணி பேரணி

மகளிருக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கக்கோரி சென்னையில் கடந்த வியாழக்கிழமை தி.மு.க. மகளிர் பேரணி நடைபெற்றது. இதில் மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டு அணிவகுத்துச் சென்றனர்.பாராளுமன்றம் சட்டமன்றங்களில் மகளிருக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு வழங்க வகை செய்யும் மசோதாவைக் கொண்டுவர மத்திய அரசு முயற்சி செய்துவருகிறது. இதற்கு சில கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருவதால் பாராளுமன்றத்தில் மசோதாவைக் கொண்டு வர முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

மகளிருக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கும் மசோதாவுக்கு தி.மு.க. ஆதரவு தெரிவித்து 33 சதவிகித இட ஒதுக்கீட்டை வலியுறுத்தி அண்ணா பிறந்த நாளான செப்ரெம்பர் 15ஆம் திகதி சென்னையில் தி.மு.க. மகளிரணியின் மாபெரும் மாநாடு நடத்தப்படும் என்று வேலூர் மண்டல மாநாட்டில் தி.மு.க. தலைவர் கருணாநிதி அறிவித்தார்.

அதன்படி தி.மு.க. சார்பில் மாபெரும் மகளிர் பேரணி சென்னையில் கடந்த வியாழன் மாலை நடைபெற்றது.

சென்னையில் நடைபெற்ற மகளிர் பேரணியை தி.மு.க. தலைவர் கருணாநிதி பொதுச் செயலாளர் அன்பழகன், பொருளாளர் ஆற்காடு வீராசாமி உள்ளிட்டோர் தனி மேடையில் நின்று பார்வையிட்டனர்.

# விஜயகாந்தின் புதிய கட்சியால் ம.தி.மு.க விற்கு பாதிப்பில்லை என்கிறார் வைகோ

விஜயகாந்த் கட்சி தொடங்கி உள்ளதால் ம.தி.மு.க.வுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்று வைகோ கூறியுள்ளார். சென்னை எழும்பூரில் உள்ள ம.தி.மு.க. தலைமை அலுவலகமான தாயகம் சீரமைக்கப்பட்டு முன்புற வாயிலில் அண்ணா சிலை நிறுவப்பட்டுள்ளது. இதனை ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கடந்த வெள்ளி திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் வைகோ நிருபர்களுக்கு தெரிவிக்கையில்; விஜயகாந்தின் புதிய கட்சி தொடர்பில் பின்வருமாறு கூறினார்.

சனநாயகத்தில் அரசியல் கட்சி தொடங்க எல்லோருக்கும் உரிமை உண்டு. எல்லோருக்கும் கருத்துச் சுதந்திரம் உண்டு.

தி.மு.க. தலைமையில் உள்ள எங்கள் கூட்டணிதான் மிகப் பலமானது. வருகிற சட்டமன்றத் தேர்தலிலும் மக்கள் மகத்தான வெற்றியை எங்களுக்கு வழங்குவார்கள். அதில் எந்த சந்தேகமும் இல்லை. தொண்டர்கள்தான் எங்கள் கட்சியின் பலம். படுதோல்விகள் ஏற்பட்டபோதிலும் அவர்கள் சோர்ந்ததில்லை. எங்களுக்கு எந்தக் காலத்திலும், எத்தகைய பாதிப்பும் வராது எனத் தெரிவித்தார்.

## 13 வயதிற்குட்பட்டோர் கடினப்பந்துப் போட்டி

# யாழ். பெரியபுலம் ம.வி. அணியை கிளி. ம.வி. அணி இலகுவாக வென்றது


ஜகதீசன்


நிரோசன்


சஞ்சீவன்


கிளி. ம.வி. அணி


யாழ். பெரியபுலம் ம.வி. அணி (படங்கள் : சசி)

ஜகதீசன், நிரோசன், சஞ்சீவன் ஆகியோரின் அபாரமான விளையாட்டின் மூலம் யாழ். பெரியபுலம் ம.வி. யை கிளி. ம.வி. அணி இலகுவான வெற்றிபெற்றது.

யாழ். பெரியபுலம் மகாவித்தியாலய 13 வயதுப் பிரிவு அணிக்கு எதிரான கடினப் பந்துப் போட்டியில் கிளி. மகாவித்தியாலய 13 வயதுப் பிரிவு அணி ஒரு இனிங்ஸ் மற்றும் 111 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

இரு அணிகளுக்குமிடையிலான போட்டி நேற்று கிளி. பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய கிளி. மகாவித்தியாலய அணி தமது முதல் இனிங்சிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 265 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ச. ஜகதீசன் எட்டு பவுண்டரிகள் அடங்கலாக 63 ஓட்டங்களைப் பெற்று ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார். மற்றும் வா. சஞ்சீவன் 38 ஓட்டங்களையும் ம. ஜனகன் 18 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் அபினவன் நான்கு விக்கெட்டுக்களையும், முகிலன் மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யா. பெரியபுலம் ம.வி. நிரோசனின் சிறப்பான பந்து வீச்சின் காரணமாக தமது முதல் இனிங்சிற்காக அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது 88 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டதுடன் பொலோவோன் நிலைக்குத் தள்ளப்பட்டது. துடுப்பாட்டத்தில் ஜெயக்குமார் 25 ஓட்டங்களையும் பிரசாந்தன் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் சிறப்பாக அணியின் உபதலைவர் யோ. நிரோசன் ஆறு விக்கெட்டுக்களையும், அணித் தலைவர் ம. கனகன் மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தமது இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த யாழ். பெரியபுலம் ம.வி. அணி சஞ்சீவனின் அபாரமான பந்து வீச்சிற்கு முகம் கொடுக்க முடியாது 66 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் கஜன்ராஜ் ஒன்பது ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் வா. சஞ்சீவன் ஏழு விக்கெட்டுக்களையும், கி. கிரிசாந் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்.

# கங்குலியைப் பதவி விலகுமாறு கிரேக் சப்பல் கேட்டார்?



இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் கங்குலிக்கும் பயிற்றுநர் கிரேக் சப்பலுக்கும் இடையிலான கருத்துமோதல் முற்றி அணிக்குள் பெரும் பிளவு ஏற்படும் நிலை தோன்றியிருப்பதாகக் கூறப்படுகிறது.

அண்மையில் நடந்து முடிந்த சிம்பாப்வேயுடனான முதலாவது டெஸ்ட் போட்டிக்கு முன்பே கங்குலியின் துடுப்பாட்டம் பிரகாசிக்காததால் அணித்தலைவர் பதவியிலிருந்து நீங்க வேண்டும் என கங்குலியிடம் நேரடியாகக் கோரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதன் காரணமாக வலைப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த கங்குலி அதனைக் கைவிட்டு ஹோட்டலுக்குத் திரும்பியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதைவிட அப்போட்டியின்போது நீண்ட நேரம் சுமார் ஆறு மணித்தியாலம் களத்தில் நின்று சுமார் 250 பந்துகளுக்கு மேல் சந்தித்தே தனது (101) சதத்தைப் பெற்றுக்கொண்டார். 2003 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 144 ஓட்டங்களைப்பெற்ற பின்னர் இப்போதே சதத்தைப்பெற்றுள்ளார்.

இதேவேளை, அணித்தலைவருக்கும் பயிற்றுனருக்கும் இடையிலான தொடர்பு எவ்வாறு இருப்பினும் கங்குலி அணித்தலைவர் பதவியிலிருந்து நீக்கவேண்டுமென சப்பல் தெரிவித்ததாக ஊடகமொன்று சிம்பாப்வே தொடருக்கு முன்பு குறிப்பிட்டுள்ளது. அத்துடன் கங்குலியின் துடுப்பாட்டம் தகுதி பெற்றதாக இல்லை என்றும் அணிக்கு கைப்பை இணைத்துக் கொள்ளலாம் என்றும் சப்பல் அன்று தெரிவித்தார்

இந்நிலையிலேயே, கங்குலி கப்டன் பதவியைத் துறக்க வேண்டும் என சப்பலே நேரடியாகக் கோரியதாக ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன. ஆயினும், கங்குலி பதவி விலக வேண்டும் என எழுந்த சர்ச்சைக்கும், தனக்கும் சம்பந்தமில்லை எனச் சப்பல் தெரிவித்துள்ளார்.

# இங்கிலாந்து அணியின் நம்பிக்கையை பாக். தொடரில் தகர்த்தெறிவோம்!

## பாக். அணித் தலைவர் இன்சமாம்



(இஸ்லாமபாத்)

நடைபெற்று முடிந்த ஆஷஸ் கிண்ண கிரிக்கெட் தொடரை அவுஸ்திரேலியாவை இரண்டுக்கு ஒன்று என்ற ரீதியில் வென்று இங்கிலாந்து அணி வென்றுவிட்டாலும் அதன்மூலம் பெறப்பட்ட அனுபவத்தையும் நம்பிக்கையையும் பாகிஸ்தானில் நடைபெறவுள்ள போட்டித் தொடரின்போது தகர்த்தெறியப் போவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் அணித்தலைவர் இன்சமாம் உல்ஹக் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியாக எட்டு ஆஷஸ் கிண்ணப் போட்டிகளின் பின்னரேயே அவுஸ்திரேலியாவை இங்கிலாந்து முதற்தடவையாக வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது. இந்தநிலையில் இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடை யான மூன்று டெஸ்ட் போட்டிகளும் ஐந்து ஒருநாள் போட்டிகளும் இவ்வருட இறுதியில் ஸ்தானில் நடைபெறவுள்ளன.

இப்போட்டித் தொடர்களுக்காக பாகிஸ்தா ன் பிரபல சுழல்பந்து வீச்சாளர் முஸ்டாக் அகமட் இரண்டு வருடங்களுக்குப் பின்னர் அணியில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக இன்சமாம் உல்ஹக் தெரிவித்துள்ளார். இவ்விரு அணிகளுக்குமிடைகளில் நடைபெற்ற 21 போட்டியில் இங்கிலாந்து 17 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தும் இரு அணிகளும் தலா இரு போட்களில் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# கிரிக்கெட் சூதாட்டம் மும்பாயில் பெண் கைது

கிரிக்கெட் சூதாட்ட விவகாரம் மற்றும் கொள்ளையர்களுடன் தொடர்புள்ளவர் என்ற சந்தேகத்தின் பெயரில் மும்பை மதுபானசாலை விற்பனை நிலையப் பெண் ஊழியர் ஒருவரை மும்பை பொலிசார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

தரணம் கான் என்ற மேற்படி பெண் பல்வேறு கிரிக்கெட் ஆட்ட நிர்ணய சதியில் ஈடுபடுபவர்களோடும் பாதாளக் குழுவினருடனும் தொடர்புள்ளதாக இருக்கலாம் என்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 5.30 மணியளவில் இவர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. விசாரணைகளின் போது அவர் கிரிக்கெட் சூதாட்டங்களோடு தொடர்புள்ளவர் என்பதை ஒப்புக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் பொலிவூட் நடிகரான ஆதித்ய பஞ்சோலையும் கடந்த வியாழனன்று இலங்கை வீரர் முரளிதரனுடன் மேற்படி பெண்ணை அறிமுகம் செய்து வைத்துள்ளமைக்காக கைது செய்யப்பட்டுள்ளார். இவர்களைவிட பிரதிப்பார்மர், யோகேஸ்வரி என்பவர்களும் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

இதற்கிடையில் மும்பை பொலிசார் சிலர் டுபாய் சென்று சர்வதேச கிரிக்கெட் அணிகளின் உதவியுடன் இணைந்து விசாரணைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரியவருகிறது.

## நியூஸ்ரார் வி.க. நடாத்தும்

# பரபரப்பிற்குக் குறைவில்லாத மென்பந்து துடுப்பாட்டப் போட்டி

கிளிநொச்சி விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன் நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மேஜர் துளசி ஞாபகார்த்த மென்பந்து துடுப்பாட்டப் போட்டி நேற்று ரசிகர்களுக்கு பெரும் விருந்தாக அமைந்தது.

உதயநகர் கிழக்கு நியூஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மேற்படி போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

பெரும் பரபரப்பாக நடைபெற்ற முதலாவது போட்டியில் சோலை 'பி' விளையாட்டுக்கழகம் பாரதி 'பி' வி.கழகத்தை வெற்றி கொண்டது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாரதி வி.கழகம் முதலில் களத்தடுப்புச் செய்யத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் ஆடிய சோலை 'பி' வி.கழகம் 15 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் நோகன்குமார் 27 ஓட்டங்களையும், சுரேந்திரன் 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் தவராசா, ரூபன் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு வெற்றி இலக்கு நோக்கி ஆடிய பாரதி 'பி' வி.கழகம் யூட்டின் அபாரமான ஆட்டத்தின் மூலம் போட்டியை பரபரப்படையச் செய்ததே ஒழிய வெற்றிபெற முடியாதுபோனது. 15 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றது பாரதி 'பி' வி.கழகம். இதில் யூட் சிறப்பாக ஆடி 33 ஓட்டங்களையும், பிரசாந் 14 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சுரேந்திரன் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

அடுத்து இரண்டாவதாக நடைபெற்ற போட்டியில் சென்யூட் வி.கழகம், ஜொனி வி.கழகத்தை வெகு இலகுவாக வெற்றி கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஜொனி வி.கழகம் 14 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரசாத் 29 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் இந்திரன் மூன்று விக்கெட்டுக்களையும், ஜெயராஜ் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு வெற்றியிலக்கு நோக்கி ஆடிய சென்யூட் வி.கழகம் அனந்தன் மற்றும் சுயந்தன் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வெற்றியை வெகு இலகுவாக்கியது. நான்கு ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் அனந்தன் ஆறு ஆறு ஓட்ட அடங்கலாக 38 ஓட்டங்களையும், சுயந்தன் நான்கு ஆறு, ஒரு நான்கு அடங்கலாக ஆட்டமிழக்காது 32 ஓட்டங்களைப் பெற்றனர்.

மூன்றாவதாக நடைபெற்ற போட்டியில் கிருஷ்ணபாரதி வி.கழக அணியை தூயதமிழ் வி.கழகம் பெரும் பரபரப்பின் மத்தியில் வெற்றி பெற்றது.

முதலில் ஆடிய கிருஷ்ணபாரதி வி.கழகம் 15 ஓவர்கள் முடிவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 105 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கணேஸ் 32 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஜெகன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

வெற்றியிலக்கு நோக்கி ஆடிய தூயதமிழ் வி.கழகம் இறுதி ஓவரில் 18 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் குமுணனின் அபாரமான துடுப்பாட்டத்தின் மூலம் வெற்றி இலக்கை அடைந்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீராக களமிறங்கிய குமுணன் ஆட்டமிழக்காது 41 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சின்னவன், பார்த்தின் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

நேற்று நடைபெற்ற கடைசிப் போட்டியில் சிறிகரன், யசிந்தன் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் என்.ஈ.சி. வி.கழகத்தை ஜொனிஸ்ரார் வி.கழகம் வெற்றிபெற்றது.

முதலில் ஆடிய ஜொனிஸ்ரார் வி.கழகம் எட்டு ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 44 ஓட்டங்களைப் பெற்று இக்கட்டான நிலையில் சிறிகரன் மற்றும் யசிந்தன் ஆகியோரின் இணைப்பாட்டம் 15 ஓவர்கள் முடிவில் 109 ஓட்டங்களைப் பெற உதவியது. இருவரும் 49 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். இதில் சிறிகரன் 29 ஓட்டங்களையும், யசிந்தன் 19 ஓட்டங்களையும், கிருஸ்ணகுமார் 19 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் தினேஷ் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

வெற்றியிலக்கு நோக்கி ஆடிய என்.ஈ.சி. அணி 13.1 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிருசாந்தன் 14 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் கிருஸ்ணகுமார் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இப்போட்டிக்கு நடுவர்களாக குகன், கிருஸ்ணரூபன் ஆகியோர் கடமையாற்றினர். இன்று போட்டிகள் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

# இங். கிரிக்கெட் அணித் தலைவருக்கு 'விடுதலை செய்த வீரர்' விருது!



ஆஷஸ் கிண்ணத்தைக் கைப்பற்றியதன் மூலம் வட இங்கிலாந்து மாநகரமும் தனது தாயக நகரமுமான ஷெப்பீல்டை (shef-field) விடுதலை செய்த வீரர் என்ற பெருமையை பெற்றதுடன், அதற்கான விருதையும் இங்கிலாந்து கிரிக்கெட் அணித்தலைவர் மைக்கல் வோன் பெற்றுக்கொண்டுள்ளார். இவ்வாறான விடுதலை வீரர்களாக வின்சன் சர்ச்சினும், நெல்சன் மண்டேலாவும் பெற்றுள்ளனர். இந்த வரிசையில் வோகன் ஆறாவது விருதைப் பெற்றுள்ளார். இதுபற்றி அந்நகர மேயர் ரோஜர் டெவிட்சன் தெரிவிக்கும்போது; அதிசயிக்கத்தக்க வகையில் வோர்ன் இந்த வெற்றியைப் பெற்றுத்தந்ததுடன் நகரவாழ் மக்களின் அளப்பெரும் பெருமையையும் பெற்றுள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.



சிந்தனைக்கு

ஆக்கிரமிப்பாளர்களின் சுவடுகளை இந்த மண் ஒருபொழுதும் சுமந்து கொள்ளாது என்பதை,எதிரிக்கு நாம் நன்கு உணர்த்தி வருகின்றோம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 18.09.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## இலஞ்சத்தொகை அதிகரிப்பு!

சிறிலங்கா அரசால் வாகன உரிமைப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வருடாந்தவரி வாகனங்கள் ஓட்டுவதற்கான சாரதி அனுமதிப்பத்திரம் என்பன இல்லாது பயன்படுத்தும் வாகனங்களைச் செலுத்துவோருக்கான தண்டப்பணம் அதிகரிக்கப் பட்டுள்ளது. இவ் அதிகரிப்பானது முன்னர் இருந்ததைவிடப் பலமடங்கு அதிகமானதாகும்.

வீதிவிபத்து, வாகன மோசடிகள் போன்றவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இவ்அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறிக்கொள்ளலாம். ஆனால், நடைமுறையில் இது எந்தளவிற்குப் பயனளிக்கும் என்பது ஒருபுறமிருக்க இதனால் பெரும் ஆதாயம் அடையப் போகின்றவர்கள் அரசாங்கமோ அன்றி மக்களோ அல்ல; சிறிலங்கா பொலிசாரே.

அதிலும் குறிப்பாக, யாழ். குடாநாடு போன்ற இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில், இவ் உயர்ந்தளவு தண்டப்பணம் அறவிடுதல் என்பது, சிறிலங்காப் பொலிசாருக்குப் பெரும் வரப்பிரசாதம் அளிக்கும் ஒன்று எனக் கூறின் மிகையாகாது. ஏனெனில், இவ் குற்றப்பணம் அதிகரிப்பதென்பது சிறிலங்காப் பொலிசாருக்கான இலஞ்சத்தொகை அதிகரிப்பாகவே கொள்ளத்தக்கது.

சிறிலங்காவில் மிக உயர்ந்த ஊழல் மோசடி இடம்பெறும் துறையாகப் பொலிஸ்துறையே உள்ளதென ஆய்வுகள் வெளிப் படுத்தியுள்ளன. இதற்கு அடுத்ததாக நீதித்துறையும் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளது. இதனை நாம் கூறவில்லை. இலஞ்ச ஊழல் தொடர்பாக ஆய்வு செய்த ஒரு சர்வதேச நிறுவனமே கூறியது. இதனை வலியுறுத்துவது போன்று பின்னர் சிறிலங்கா சனாதிபதியும் ஓரிரு தடவைகள் பேசியுள்ளார்.

இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள யாழ். குடாநாட்டில் சிறிலங்கா ஆயுதப் படையினருடன் பொலிசாரும் நிலைநிறுத்தப்பட்டுள்ளார்கள். இவர்கள் சிவில் நிர்வாகத்தைப் பாதுகாப்பதற்கும் சட்டம் ஒழுங்கைப் பேணவுமே இங்கு நிலைநிறுத்தப்பட்டுள்ளதாகச் சிறிலங்கா அரசாங்கத் தரப்பு கூறிக்கொள்வதுண்டு.

ஆனால், இன்று யாழ். குடாநாட்டில் பல்வேறு குற்றச் செயல்களும் மலிந்து போயுள்ளன. களவு, கொள்ளை, கொலை, தீவைப்பு, குழுமோதல்கள் என்பன ஒருபுறத்திலும் கலாச்சாரச் சீர்கேடு, சட்டவிரோத நடவடிக்கை மற்றொரு புறத்திலும் மலிந்து போயுள்ளன. யாழ். குடாநாட்டிலுள்ள பொதுமக்களில் பெரும் பாலானோர் அமைதியானதும், பாதுகாப்பானதும், அச்சமற்றதும் ஒழுக்கமானதுமான தொரு வாழ்வு மீண்டும் வராதா? என ஏங்கிக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால் அங்கு நிலை நிறுத்தப்பட்டுள்ள பொலிசாரோ இவற்றில் எதிலுமே கவனம் செலுத்துவதாக இல்லை. மக்களின் முறைப் பாடுகளைப் பதிவு செய்யவோ மீறிப் பதிவுதான் செய்து விட்டாலோ அதன் மீதான நடவடிக்கைகள் எடுப்பதற்கோ அவர்கள் தயாராக இல்லை. அவர்கள் ஒருபுறத்தில் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிப்பவர்களாகவும்,பணம் சேர்ப்பதிலுமே தீவிர அக்கறை கொண்டவர்களாகவுள்ளனர்.

எடுத்துக்காட்டாக, இன்று யாழ். குடாநாட்டில் இடம்பெறும் சட்ட விரோத மண்அகழ்வில் இவர்களின் பங்கும், சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பின் பங்கும் பெருமளவில் உண்டு. பெருமளவு பணத்தை இலஞ்சமாகப் பெற்றுக்கொண்டு இம்மண்அகழ்விற்கு உதவு கின்றனர். அன்றிப் பாதுகாப்பு அளிக்கின்றனர். இத்தகைய மண் கடத்தல் போன்றவற்றுடன் தொடர்புடையது போன்றே மாடு கடத்தல் போன்றவற்றிலும் தொடர்புண்டு.

இதேசமயம், சமூகச் சீரழிவு நடவடிக்கைகளில் ஈடுபடுவோரிடம் நெருக்கமான உறவைக் கொண்டுள்ளமையினால் இச்சமூக விரோதிகள் பொதுமக்களை மிரட்டும் அளவிற்குச் சமூகத்தில் துணிச்சலாக நடமாடக்கூடிய நிலையும் தோன்றியுள்ளது. இன்று சமூகவிரோதிகளுக்கு எதிராகப் பொலிஸ் நிலையங்களுக்குச் செல்ல பொதுமக்கள் அஞ்சும் நிலையே உள்ளது. அந்தளவிற்குச் சமூக விரோத சக்திகளுடன் சிறிலங்காப் பொலிசாரின் தொடர்புகள் பல மாகவுள்ளது.

இத்தகையதொரு நிலையில் வாகனப் போக்குவரத்துத் தொடர்பான உயர்ந்தளவு குற்றப்பணம் அறவிடும் சட்டம் யாழ். குடாநாட்டில் அமுலாக்கப்பட்டுள்ளமை சிறிலங்கா பொலிசாருக்கு மேலும் பெருந்தொகை இலஞ்சத்தைப் பெற்றுக்கொடுக்கும். நடவடிக்கையாகவே இருக்கும். அதாவது முன்னர் இக்குற்றங்களுக்கான தண்டப்பணம் குறைந்ததாக இருந்தது. பெறப்படும் இலஞ்சமும் குறைவாகவே இருந்தது. தற்பொழுது குற்றப்பணம் அதிகமாக இருக்கையில் அறவிடப்படும் இலஞ்சத் தொகையும் அதிகமாக இருப்பதோடு முன்னர் தமது தேவைகளுக்கேற்ப இலஞ்சம்பெற நீண்டநேரம் செலவிட்ட பொலிசார் தற்பொழுது குறுகிய நேரத்தில் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளமுடியும்.

சிறிலங்கா பொலிஸ் துறைகளைப் பொறுத்து இலஞ்சம் கூடவே பிறந்ததொன்றாயினும் யாழ். குடாநாட்டில் இன்று பொலிசார் செயற்படுவது முற்றிலுமாக சட்டவிரோத செயல்களை ஊக்குவிக்கவும், இலஞ்சம் பெறுவதற்கும் என்றே ஆகிவிட்டதுபோல் உள்ளது. ஏனெனில் இவர்களில் எந்த நடவடிக்கைகளும் சட்டம், ஒழுங்கைப் பேணுவதாகவோ மக்களுக்கு பாதுகாப்பு அளிப்பதாகவோ இல்லை.

# நான் சாகும் வேளையிலும் மகிழ்ச்சியுடனேயே இருக்கின்றேன்

**தியாகி லெப். கேணல் திலீபன் உண்ணா விரதத்தின் மூன்றாம் நாள் மக்கள் மத்தியில் ஆற்றிய உரை**

**எனது அன்புக்கினிய மக்களே!**

என்னால் பேச இயலவில்லை அறிவித்து விட்டார்கள்; அதனால்பேச முயல்கிறேன்.உங்களை ஏமாற்றக் கூடாது என்பதற்காக பேசுகிறேன். உண்மையாகவே என்னால் பேச முடியவில்லை.நான் இப்போது மகிழ்ச்சியில் மிதக்கிறேன்.நீங்கள் பல்லாயிரக்கணக்கில் என்முயற்சிக்கு ஒத்துழைப்பு தந்திருப்பதை என் கண்கள் பார்க்கின்றன. பேச முடியாமல் இருக்கும் என்னை நீங்கள் தரும் உற்சாகம் பேசவைக்கின்றது.மறியல் போராட்டம் வெற்றிகரமாக நடைபெறுகிறது என்று அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

"நான்மீட்கப்படமுடியாத இடத்திற்குசென்று கொண்டிருக்கின்றேன்.உங்களைவிட்டுச் செல்லும் நிலைக்குக் கொஞ்சம் கொஞ்சமாகவந்து கொண்டிருக்கிறேன்".



நான் வாழ்நாள் பூராகவும் நேசித்த மக்களே! நீங்கள் என் முன்னே நிற்கிறீர்கள். சாகும் வேளையிலும் மகிழ்ச்சியுடனேயே இருக்கிறேன். மகிழ்ச்சியுடனேயே சாகிறேன்

(மக்களின்அழுகுரல் இதற்குமேல் அவரைப் பேசமுடியாமற்செய்துவிட்டது.)

- போர் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு -

# ஹெல உறுமயவின் நிலைப்பாடு குறித்து மகிந்த ராஜ பக்ஷ தெளிவுபடுத்த வேண்டும்

**-ஐக்கியதேசியக் கட்சி**

(கொழும்பு)

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாடு தொடர்பாக சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ தெளிவுபடுத்தவேண்டும் என்று ஐ.தே.கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜாதிகஹெல உறுமயவின் பொருளாளர் போர் மூலமே இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் எனவும் கூறியிருந்தார். இது தொடர்பாக சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ இனப்பிரச்சினையில் ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாடுபற்றி தெளிவான விளக்கத்தைத் தரவேண்டும்.

மகிந்தராஜபக்ஷ போரை எதிர்த்துவருவதாக கூறிவரும் வேளை அவரின் கூட்டுக்கட்சியான ஜாதிகஹெல உறுமய போர் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு எனக் கூறிவருகிறது. எனவே இவ் விடயம் தொடர்பாக உடனடி விளக்கம் தேவை எனவும் அவர் கூறியுள்ளார். ஐ.தே.கட்சியும்,சுதந்திரக் கட்சியும் தமக்கு இயன்றவரை போரைத் தவிர்க்க முயன்றுவரும் வேளையில் மகிந்தராஜபகஷ வெளிப்படையாகப் போருக்கு அழைப்பு விடுக்கும் ஒரு கட்சியுடன் உடன்படிக்கை செய்துள்ளார் எனவும் அவர் கூறியுள்ளார்.

# சு.க. பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்கு செல்லத் தடை

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்கு செல்வதற்கு தடை விதிக்கப் பட்டுள்ளது.இதற்கமைய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உத்தியோகபூர்வ அனுமதியின்றி எந்தவொரு அமைச்சரோ பாராளுமன்ற உறுப்பினரோ மறுஅறிவித்தல்வரை வெளிநாடுகளுக்குச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளதாக சுதந்தரக் கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

# ராஜபக்ஷ- ஹெல உறுமய உடன்பாடு குறித்து மாவட்ட மட்ட உறுப்பினர்களுக்கு விளக்கம்

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவுடன் ஜாதிக ஹெல உறுமய செய்து கொண்ட உடன்படிக்கை குறித்து கட்சியின் மாவட்ட மட்ட உறுப்பினர்களுக்கு விளக்கமளித்துவருகின்றது என ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த சிறிவர்ண சிங்க தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய வருகின்ற சனாதிபதித்தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவிற்குஆதரவு சேர்க்கும் முகமாக ஆயிரம் விகாரையில் ஆயிரம் பிரச்சாரக் கூட்டங்களை நடத்தத் தீர்மானித்துள்ளது.

இக் கட்சிமகிந்த ராஜபக்ஷவிற்கு தமது ஆதரவை வழங்குவதாக ஏற்கனவே உடன்படிக்கை செய்துள்ளது.ஏன்மகிந்த ராஜபக்ஷவுடன் உடன்படிக்கை செய்து கொண்டோம். அவருக்கு ஆதரவளிக்க ஏன் தீர்மானித்தோம் என்பது பற்றி கட்சி உறுப்பினர்களிற்கு விளக்கமளித்து வருகிறோம்

எதிர்வரும் சனாதிபதித்தேர்தலிற்கான வேட்பு மனுத்தாக்கல் செய்து கொண்டதன் பின்னர் ஆதரவு சேர்க்கும்ஆயிரம் கூட்டங்களும் நடத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

# படையினரின் புதிய காவலரண்கள் மன்னார் நகரப்பகுதியில் அமைப்பு

(மன்னார்)

மன்னார் பொது விளையாட்டு மைதானத்தை அண்டிய பிரதான நகரப் பகுதியில் சிறிலங்காப் படையினர் புதிய காவலரண்களை அமைக்கும் பணியில் நேற்றுக்காலை முதல் ஈடுபட்டுள்ளனர்.

மண்மூடைகளைக் கொண்டு பிரதான சாலைகளில் கரையோரப் பகுதிகளில் பாரிய அளவில் இரண்டு காவலரண்களை அமைக்கும் பணிகளில் படையினர் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் அதிகளவில் பயணம் செய்யும் இப் பகுதியில் படையினர் காவலரண்களை அமைப்பதால் மக்கள் பலத்த அசௌளியங்களை எதிர் கொள்ள நேரிடும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குருதிக் கொடையாளர்கள் உயிர்காக்கும் உத்தமர்கள்.

இரத்தவங்கி யாழ். போதனா மருத்துவமனை

# தேசப்பற்றுள்ள தேசிய இயக்க கூட்டத்தில் சனாதிபதி வேட்பாளர் ராஜபக்ஷ உரை

(கொழும்பு)

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் நடத்திய கூட்டம் ஒன்றில் சிறிலங்காவின் பிரதமரும் சனாதிபதி வேட்பாளருமான மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டு உரையாற்றியுள் ளார்.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் நடத்திய இக் கூட்டத்தில் ஜே.வி.பியின் பிரச்சார செயலாளர் விமல் வீரவன்சவும் கலந்து கொண்டிருந்ததார். இக் கூட்டத்தில் தான் எதிர்பாராத விதமாகவே கலந்து கொண்டதாகவும், தேசபற்றுள்ள தேசிய இயக்கத்தின் ஆதரவை தான் இழக்க விரும்பவில்லை என்றும் கூட்டத்தில் உரை யாற்றிய மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதேவேளை அங்கு உரையாற்றிய ஜே.வி.பியின் பிரச்சார செயலாளர் பொதுக்கட்டமைப்பையும், இடைக்கால நிர்வாக சபையையும் இரத்து செய்வதற்கான உறுதிமொழியை பிரதம மந்திரி மகிந்த ராஜபக்ஷ வழங்கியுள்ளதால் தாம் அவருக்கு ஆதரவு வழங்கியதாகத் தொவித்தார். (32)

## சேகு இஸ்ஸதீனின் செயலாளர் வாகன விபத்தில் பலி

(கொழும்பு)

சிறிய மற்றும் கிராமிய கைத்தொழிலுக்கான துணை அமைச்சரும் ஊடகத்துறை பிரதி அமைச்சருமான சேகு இஸ்ஸதீனின்பிரத்தியேகச் செயலாளர் நேற்று இடம் பெற்ற வாகன விபத்தொன்றில் பலியானார்.

அம்பறை-கண்டி வீதியூடாக சென்று கொண்டிருந்த வாகனம் அறந்தலாவைப் பகுதியில் பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானதிலேயே இவர்பலியானார் விபத்து இடம் பெற்ற போது வாகனத்தில் ஏழுபேர் பயணம் செய்துள்ளனர்.

## கிளி...

மண்டபத்தில் திட்ட முகாமையாளர் பொன். நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மானாவாரியாக மழையை நம்பி நெல் உற்பத்தி மேற்கொள்ளும் விவசாயிகள் நெல் உற்பத்தியை மேற்கொள்ளலாம்.

நெல் உற்பத்தியைக் குறைத்து மாற்று பயிர்ச்செய்கையாக விவசாயிகள் மேட்டு நிலச் செய்கையில் ஈடுபடலாம்.

உற்பத்தி செய்த நெல்லை சந்தைப்படுத்த முடியாத ஓர் அவல நிலையில் விவசாயிகளிடம் அந்த போக உற்பத்திக்கான பணம் இல்லாமை காரணத்தால் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (46)

## உள்நாட்டில்...

முன்னைய ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் இடைக்கால நிர்வாக சபை குறித்த பேச்சுக்குக் கூட சந்திரிகா தடை விதித்தவர். அந்த அரசாங்கத்தை பதவி கவிழ்த்தார். தன்னுடைய நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி தமிழ் மக்களுக்கான மனிதாபிமான பிரச்சினைகளைக் கூட தீர்ப்பதற்கு அவர் முன்வரவில்லை என்றார்.

சந்திரிகாவின் பதவிக்காலம் முடிவடையும் காலகட்டத்தில் அவர் வெளியிடுகின்ற கருத்துக்களும், நடவடிக்கைகளும் சமாதான முயற்சியைப் பாதிக்குமா எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கும் போது நாம் ஏற்கனவே அது பற்றி நோர்வேக்கு எடுத்துக் கூறியுள்ளோம். சந்திரிகாவின் போலித் தனமான பேச்சுக்களும் முரண்பாடான கருத்துக்களும் சமாதான முயற்சிகளில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக சுட்டிக்காட்டி வருகின்றோம். சந்திரிகாவின் பேச்சு வேறெனவும், செயல் வேறெனவும் நோர்வே அறிந்து வைத்துள்ளது. சமீபத்தில் நோர்வே பிரதி வெளிவிகார அமைச்சர் வந்த போது அவர் அளித்த வாக்குறுதி ஒன்றை மறு நாளே மாற்றியிருந்தார். அதனை நோர்வே தெரிந்து வைத்துள்ளது என அவர் தெரிவித்தார்.

## அரசாங்கமும்...

போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இலங்கையின் ஒருமைப்பாடு, இறைமை சம்பந்தான அமெரிக்காவின் நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை. விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் குறித்தும் அமெரிக்கா தீவிர கவனம் செலுத்தி வருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தமது...

அமைதி நிலவவில்லையே..? இதற்குப் பதிலாக அண்மையில் நான் நோர்வே நாட்டில் சர்வதேச தீவிரவாதம் பற்றி ஆற்றிய உரையைக் குறிப்பிட்டால் பொருத்தமாக இருக்குமென நினைக்கிறேன்.

நான் அங்கு நிகழ்த்திய உரையின் தலைப்பு "ஏன் தீவிரவாதம்" என்பது தான். தீவிரவாதத்தில் இரண்டு வகை உள்ளது. ஒன்று மக்கள் தீவிரவாதம். இரண்டாவது சனநாயக தீவிரவாதம் மக்கள் தீவிரவாதம் என்பது மத அடிப்படையில் பொது மக்களுக்குள் மூட்டி விடப்படுகிற தீ.

சனநாயக தீவிரவாதம் என்பது சிறுபான்மையினர் மதிக்காமல் அவர்களின் சம்மதம் பெறாமல் பெரும்பான்மையினர் எடுக்கும் சில தீவிரவாதம் இது தான் இலங்கையில் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்ற உயிர்ப் பலிகளுக்குக் காரணம்.

முதலில் தமிழர்கள் சனநாயக முறையில் குரல் கொடுத்தார்கள். ஆட்சி யாளர்களின் காதுகளில் இந்தக் குரல்கள் விழவில்லை. ஆகவே அடுத்த தலைமுறையினர் ஆயுதங் களைக் கையில் எடுத்து தங்கள் வாழ்வுரிமையைக் காத்துக் கொள்ளப் போராடுகிறார்கள். அதற்குத் தீர்வு கண்டால் தான் அங்கே அமைதி திரும்பும்.

ராஜீவ் விசாரணையைப் பற்றி வெளியிட்டுள்ள புத்தகத்துக்கு விடுதலைப்புலிகளிடமிருந்து கடும் கண்டனம் வந்ததாக கூறப்படுகின்றது.

அதைக் கண்டனம் என்று சொல்ல முடியாது. என் புத்தகத்தின் மீதான அவர்களின் உணர்வைப் பதிவு செய்தார்கள். என்று தான் சொல்ல வேண்டும்.

புலிகளின் இணையத் தளத்தில் என் புத்தகம் பற்றி அவர்கள் தரப்புக் கருத்துக்களை வெளியிட்டனர்.

அதில் "ராஜீவ் கொலையைப் பற்றியும் அதன் விசாரணையைப் பற்றியும் விரிவாக எழுதியுள்ள தாங்கள் இந்திய -இலங்கை அமைதி ஒப்பந்தத்தைப் பற்றியும் இலங்கையில் அமைதிப் படை செய்த அட்டாகசங்களைப் பற்றியும் ஏன் எழுத மறந்தீர்கள் என்று கேள்வி எழுப்பப்பட்டிருந்தது என்று கார்த்திகேயன் தெரிவித்தார்.

## நாடுதிரும்பியதும்...

ஆராயப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஐ.நா. மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சனாதிபதி சந்திரிகா நியூயோர்க் புறப்படமுன்னர்,மகிந்தராஜபக்ஷ மீதான தனது விசனத்தை வெளிப்படுத்தி ரூபாவாகினி தொலைக்காட்சியில் பேட்டியொன்றை வழங்கவிருந்தார்.

அதற்காகரூபாவாகினி தொலைக் காட்சி நிலையக் குழுவொன்று சனாதிபதி மாளிகைக்குச் சென்றிருந்தது. அவ்வேளையில் மகிந்தராஜபக்ஷ அவருடன் தொடர்பு கொண்டு அவ்வாறு செய்வது சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வெற்றியைப் பாதிக்குமென்றும் சனாதிபதி நியூயோர்க்கிலிருந்து திரும்பியதும் பிரச்சினையைப் பேசித்தீர்த்துக் கொள்ளலாம் எனவும் தெரிவித்திருந்தார்.

அப்பொழுது சனாதிபதிசந்திரிகா, ஜாதிகஹெலஉறுமயவுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு மகிந்த ராஜபக்ஷவிடம் கோரியிருந்தார்.

ஆனால் சனாதிபதி நியூயோர்க் பயணமான பின்னர் அன்றைய தினம் ஜாதிகஹெல உறுமயவுடனான ஒப்பந்தத்தை மகிந்த ராஜபக்ஷ பரிமாறிக்கொண்டார்.

இந் நிகழ்வின் போது ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் எல்லாவெல மேதானந்த தேரர் சனாதிபதி சந்திரிகா குறித்து ஆற்றிய உரையும் சனாதிபதிக்கு சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவ் உரையின் ஒளிப்பதிவை அமெரிக்காவில் தற்போது தங்கியிருக்கும் சந்திரிகா தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றிடமிருந்து பெற்றுக் கொண்டுள்ளார்.

இவ்வாறான நிலையிலேயே இலங்கை திரும்பியதும் ஐ.தே.கவுடனான பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (32)

## யுத்த..

பில் சனாதிபதி சந்திரிகா மற்றும் வெளிவிவகார அமைச்சர் அநுரா பண்டார நாயக்க சர்வதேச செயலக செயலாளர் நாயகம் ஜெயந்ததன பால ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐக்கிய நாடுகள் பிரதிப் பொதுச் செயலாளரையும், ஆயுத மோதல் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையினர் விசேட பிரதிநிதியையும் சந்தித்துள்ளார்.

இதேவேளை ஐ.நாவின் 60 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் நேற்று முன்தினம் சந்திரிகா குமாரதுங்க உரையாற்றுகையில் சமாதானப் பேச்சுவார்த்தைக்குச் செல்லுமாறு விடுதலைப்புலிகளுக்கு, உண்மையிலேயே அழுத்தம் போட வேண்டுமென சர்வதேச சமூகத்தைக் கோரியிருக்கின்றோம். ஒரு நாட்டின் இறைமைக்குச் சவால் விடுக்கும் இயக்கங்களுக்கு எதிராக உலக நாடுகள் தடை விதிக்க வேண்டும்.

எங்கள் நாட்டில் நிலவும் இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணும் துணிகரக் கொள்கையை எனது அரசாங்கம் முன்வைத்து அத்தோடு சமஷ்டி ஆட்சி முறைமூலம் தீர்வு காணுவதற்கும் முன் வந்தது.

மோதலுக்கு குழு முடிவு கட்டும் முகமாக ஆயுதக் குழுவான புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினோம். யுத்த நிறுத்த உடன்படிக்கை ஒன்றுக்கு முன் வந்திருந்தோம்.

எனினும் விடுதலைப்புலிகள் பயங்கரவாத வழி முறைகளிலிருந்து விலகவில்லை என்பதற்கு வெளிவிவகார அமைச்சரின் அண்மைய கொலையையும் அரசியல் பழிவாங்கல் நிகழ்வுகளும் சான்றாகவுள்ளன.

இவற்றுக்கெல்லாம் இராணுவ நடவடிக்கை மூலம் பதிலளிக்கலாம். இருந்த போதிலும் நாங்கள் அதனை நிராகரித்து விட்டோம். அத்தோடு யுத்த நிறுத்த உடன்படிக்கையிலும் அரசியல் தீர்விலும் எமக்குள்ள பற்றுறுதி காரணமாக அதை நிராகரித்து விட்டோம் இதனால் இவர்களுடன் நடத்திய சமாதான அணுகுமுறைகளையும் மீளாய்வுக்குட்படுத்தியிருக்கின்றோம். இதன் பிரகாரம் நிலையான சமாதானத்துக்கான பேச்சுக்களில் நாங்கள் ஈடுபடுவதற்கு வசதியாக சர்வதேச சமூகம் விடுதலைப்புலிகளுக்கு உண்மையான அழுத்தம் கொடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.



## வன்னி தொழில் நுட்பவியல் மாணவர்களின் விசேட "கணினி" பயிற்சிப்பட்டறை

(கிளிநொச்சி)

வன்னி தொழில்க் நுட்பவியல் நிறுவக மாணவர்கள் தமக்கான முதலாவது தவணை விடுமுறை காலத்தில் கணினி சம்பந்தமான விசேட பயிற்சிப் பட்டறை ஒன்றை நடத்தவுள்ளனர்.

கணினியின் பாவனையை தொழில் துறையில் மேம்படும் வகையில் இப் பயிற்சிப் பட்டறையில் வன்னிப் பெரு நிலப்பரப்பிலுள்ள பாடசாலை கணினி ஆசிரியர்கள் அரச அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள், தொழில் நிறுவனங்களின் பணியாளர்கள், வங்கிகளின் பணியாளர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் எனப் பயிற்சிப் பட்டறை ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். நாளை மறுதினம் முதல் 30 ஆம் திகதி வரை நடாத்தப்படும் இப் பட்டறையில் கலந்து பயன்பெற விரும்பும் அனைத்துப் பாடசாலை கணினி ஆசிரியர்கள் அரச அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள், தொழில் நிறுவனங்களின் பணியாளர்கள், வங்கிகளின் பணியாளர்கள் தங்கள் நிறுவனத்தினூடாக வன்னித் தொழில் நுட்பவியல் நிறுவகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## புலனாய்வுத்..

இது தொடர்பாக இராணுவப்பேச்சாளர் தெரிவிக்கையில்; இராணுவ புலனாய்வினருக்கு மட்டும் அல்ல இராணுவத்தில் பணியாற்றுகின்ற அனைவருக்குமே அச்சுறுத்தல் இருக்கின்றது. அதனால் ஒவ்வொருவருக்கும் நூற்றுக்கு நூறு வீதம் பாதுகாப்பு அளிக்க முடியாது. எனினும் உரியபாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதேபோல புலனாய்வுத்துறையினரின் பாதுகாப்புக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (32)

## இராணுவத்தினரிடம்.

டம் முடிவடைந்த பின்னர் அது முறைப்படி புதுப்பிக்கப்படாத நிலையில் இராணுவத்தினர் மன்னாரில் சுற்றி வளைப்புத் தேடுதல்களை நடத்தியுள்ளதாகவே அவர் தமது முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பொன்றின் போதே செல்வம் அடைக்கலநாதன் தமது முறைப்பாட்டை தெரிவித்துள்ளார்.

இதே வேளை இச் சுற்றி வளைப்பின் போது வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விநோனோகராத லிங்கத்தின் வீடும் இராணுவத்தினரின் சோதனைக்குள்ளாகியதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (21)

# சாவு அறிவித்தல்



## கந்தையா பூரணம்

ஏழாலை சூராவத்தையைப் பிறப்பிடமாகவும் இல.08-டி-08 உருத்திரபுரம் கிழக்கை நிரந்தரவசிப்பிடமாகவும் கொண்டவருமான கந்தையா பூரணம் 17.09.2005 நேற்றைய தினம் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை கந்தையாவின் அன்பு மனைவியும், இராஜரட்ணம், காலஞ்சென்ற யோகரட்ணம் (கரைச்சி தெ.ப.நோ.கூ. சங்கம்), தருமரத்தினம் (வனவளப்பிரிவு), அபூர்வமலர் நித்தியானந்தவதி, ஆனந்தமலர், காலஞ்சென்ற தரைரட்ணம் ஆகியோரின் பாசமிகு தாயாரும் யோகராணி, யோகேஸ்வரி, காலஞ்சென்ற ஜெறோம் தங்கராசா, காலஞ்சென்ற ஜெயசிங்கம், சகாதேவன் (தமிழர்புனர்வாழ்வுக் கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் (இன்று) 18.09.2005 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் உருத்திரபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

குடும்பத்தினர்.

(6412)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2035 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.